# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை




தமிழக மேலவைக்கு நியமன உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முகவை மாவட்டச் செயலாளர் திரு. எஸ். எஸ். தென்னரசு அவர்கள் 22—4—70ல் பதவியேற்ற காட்சி.


விலை 20 காசு

7-6-70

# சந்திரசேகரின் சவுக்கடி!

புதுக் காங்கிரஸ் தலைவர்களின் கூட்டம் டில்லியில் 26-5-70 அன்று நடைபெற்றபோது இளந் துருக்கியர் தலைவரான திரு. எஸ். சந்திரசேகர் கொடுத்துள்ள சாட்டையடி போன்ற விளக்கம் மிகவும் ஆழமான சிந்தனைக்குரியது மட்டுமல்ல. மதச் சார்பின்மையே தங்கள் ஆட்சியின் கொள்கை என முழங்குவோரின் போலித்தனத்தை அம்பலப்படுத்துவதுமாகும்.

“செக்யூலரிசம் என்றால் அதற்குப் பொருள் என்ன? மதச் சம்பந்தப்பட்ட எல்லா புற ஒழுக்கங்களிலும் சடங்காச்சாரங்களிலும் நாம் சிரத்தை ஏதும் காட்டக் கூடாது என்பதுதான். குறிப்பாக பெரும் பதவிகளில் இருப்போர் காட்டக்கூடாது ஆனால். இன்று நாம் காண்பது என்ன? உயர் பதவிகளில் இருப்போர் தமது மத ஆர்வத்தை வெளியே காட்டிக் கொள்கிறார்கள்; இது செக்யூலரிசத்துக்கு விரோதமல்லவா? காலஞ் சென்ற நேரு. நேபாள தலைநகரான காட்மாண்டுக்குப் போயிருந்தபோது, அங்குள்ள பிரசித்தி பெற்ற பசுபதி நாதர் கோயிலுக்கு வரும்படி சிலர் அழைத்தார்கள். அவர் மறுத்து விட்டார், ஆனால், இன்றைய ஆட்சியாளர்கள் இத்தகைய அழைப்புக்களை ஏற்பதோடுமட்டுமல்ல இத்தகைய விஷயங்களைப் பத்திரிகைகளில் பெரிய அளவில் விளம்பரப்படுத்தவும் விரும்புகிறார்கள்.

இத்தகைய நிகழ்ச்சிகள் பிற மதத்தவரின் உணர்ச்சிகளைத் தாக்கும்; அவர்களைப் புதுக் காங்கிரசில் இருந்து தூரத்திலேயே ஒதுக்கி வைக்கும்.

சமீபத்தில் நான் மைசூர் மாநிலத்திற்குப் போயிருந்தபோது அங்கே கட்சி அலுவலகம் ஒன்றைத் திறந்து வைக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள்; அந்த அலுவலகத்தில் மிகவும் பிரதானமாக இந்துக் கடவுள் கணபதி படம் வைக்கப் பட்டிருந்ததைக் கண்டேன்.

இப்படிப்பட்ட பழக்கம், நம் கட்சியிலிருந்து முஸ்லிம்களும் பிற மதத்தினரும் விலகி நிற்கும்படி ஆகுமே தவிர, இது மத வெறி இல்லாமல் வேறென்ன?

—இவ்வாறு திரு. சந்திரசேகர் எம். பி. அவர்கள் விளாசிந் தள்ளியுள்ளார்!

எப்படியெல்லாம் ஆட்சித் தலைமை உருவாகியிருக்கிறது என்பதற்கு இத்தகைய விளக்கங்களே போதுமானவை ஆகும்.

புதுக்காங்கிரசின் மாநாடு பம்பாயில் நடைபெற்றபோது, “பூமி பூஜை” என்று பந்தல்கால் நடுவதற்குப் புரோகிதர் வந்து மந்திரம் கூறிய பிறகே, அப்போதைய இடைக்காலத் தலைவர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் தயாரானார்!

பழைய காங்கிரஸ் புது டில்லியில் குறிப்பிட்ட காலத்திற்கு ஒன்றரை மணிநேரம் தள்ளிகூடியது காரணம் இடையில் ராகுகாலம் வந்து விட்டதாம்!

பிரதமர் அம்மையார் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் தனது அந்தரங்க செயலாளரை திருப்பதிக்கு அனுப்பி பூஜை செய்து, உண்டியலில் காணிக்கை செலுத்தச் செய்கிறார்; பிறகு ஒருநாள் அவரே வந்து “வெங்கடேச சுப்ர பாதம்” கேட்டு மனம் உருகி நிற்கிறார்!

ஜனாதிபதியாகவுள்ளவர் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் டில்லி கோவில் முதல் ஏழுமலையான் வரை தரிசித்துச் செல்லும் கேலிக்கூத்து உப ஜனாதிபதியோ அதற்காகவே தமது பரிவாரத்துடன் டில்லியிலிருந்து திருப்பதிக்குப் படையெடுக்கும் கொடுமையான நிலை!

மதச்சார்பின்மைப் பற்றி இத்தகைய ஆட்சித் தலைவர்கள் பேசுவதைவிட வெட்கக்கேடு வேறு இருக்க முடியுமா? பெரும் பொறுப்பிலுள்ளவர்கள் திரு. சந்திரசேகர் எம். பி. குறிப்பிட்டதுபோல, இத்தகைய நம்பிக்கைகளை வெளிச்சம் போட்டுக் காட்டிக்கொள்வதைவிட வேதனையான, வெட்கப்படத்தக்க செயல் வேறு இருக்கமுடியுமா?

அரசாங்க அலுவலகங்களில் இந்துமதக் கடவுள் படங்கள், அரசாங்க காம்பவுண்டுகளில் பஜனை மடங்களைப்போல் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்தல் போன்ற விஷமத்தனங்கள் ஆகிய இவைகளை எப்படி மற்ற மதக்காரர்கள் சகிக்க முடியும்? மத மற்றவர்கள் மதத்தில் அறவே நம்பிக்கை இழந்தவர்கள் தான் எப்படி சகிக்கமுடியும்? இதையெல்லாம் சிந்திக்காவிட்டால், உலகில நமது மதிப்பு எப்படி இருக்கும்?

பசுவுக்காக கிளர்ச்சி நடத்தும் நிர்வாண சாதுக்களுக்கும், கோயில் கும்பாபிஷேகங்களுக்குச் செல்லும் ஆட்சித்தலைவர்கள் யோக்கியதைக்கும் என்ன வித்தியாசம் காணமுடியும்?

மதச்சார்பின்மை என்று கூறி, அதற்கு சுறுக்கு, வியாக்யானம் செய்வதைவிட அதை எடுத்து எறிந்துவிட்டு “இந்துமத பார்ப்பன சாம்ராஜ்யம்” என்றே பச்சையாக எழுதிவைத்துக்கொள்வதே நல்லது பச்சோந்தித்தனத்தைவிட பகிரங்கமாக அடையாளம் காட்டிக்கொள்வது நல்லது அல்லவா?

சமதர்மம், மதச்சார்பின்மை, ஜனநாயகம்—இவை மூன்றும் கடவுள், மதம். சாதி—இவை அழிந்த இடத்தில் தோன்றி வளரவேண்டியவைகள். இவைகளையும் வளர்ப்போம்—கடவுளையும் மதத்தையும் சாதியையும் வைத்துக் கொண்டே என்பது அசல் ஏய்ப்பு வேலை? குரங்கையும் வளர்த்து நெசவும் நெய்வது போல அபத்தமான வேலையாகும். மத்திய ஆட்சியாளர்களுக்கு, சந்திரசேகர் தந்த சவுக்கடிக் கப்புறமாவது புத்தி வராதா?

'விடுதலை' 23—5—70 தலையங்கம்,

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 7—6—70 | இதழ் 47

# பயிற்று மொழிப் பிரச்னை?

விரைவில் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப் படப் போகிறார்கள். அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படும் போது, அவர்கள் பெற விரும்பும் பயிற்சி மொழிபற்றிய பிரச்னை தலையெடுக்கப்பெறுவது தலையாயதாகவு மிருக்கப் போகிறது.

தமிழக அரசின் கல்விக் கொள்கையைப் பொறுத்த மட்டில், பயிற்சி மொழி எல்லா மட்டத்திலும் தமிழாகத் தானிருக்க வேண்டும் என்பது திட்ட வட்டமாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. தி. மு. கழகம், ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு மட்டுமல்ல, அது பிரதான எதிர்க் கட்சியாக இருந்து செயல்பட்டுக் கொண்டிருந்த காலத்திலேயே, தமிழ் நாட்டின் பயிற்சி மொழி தமிழாகத்தா னிருக்க வேண்டும் என்பதனையும் சந்தர்ப்பங்கள் கிடைத்த போதெல்லாம் எடுத்துக் காட்டியும் வந்திருப்பது கவனிக்கத் தக்கதாகும்,

இந்நிலையில், கடந்த சில ஆண்டுகளாக கல்லூரிகள் செயல்படத் தொடங்கும் நேரத்தில் பெரியவர்கள் என்று கருதப்படுகிற சிலரால், பயிற்சி மொழியை ஒரு பிரச்னையாக்கி விட்டு விடப் படுகிறது.

பயிற்சி மொழியைப் பற்றிய பிரச்னைகள் எழும் போதெல்லாம் ஒரு விவகாரம் மறக்கப்படாமல் எடுத்துக் காட்டப்படுகிறது. தாம் பயில வேண்டிய மொழி எது என்பதை நிர்ணயித்துக் கொள்ள வேண்டியவர்கள், மாணவர்களும் அவர்களைப் பெற்றவர்களுமே என்பதுதான் அது.

ஒரு மாணவன், தான் எந்தப் பாடங்களை எடுத்துப் படிக்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொள்வதையோ, அல்லது அந்தத் தீர்மானத்தை அவனது பெற்றோர் ஏற்படுத்தித் தருவதையோ தவறு என்று எவரும் குறைகூற முடியாது.

ஆனல், அந்த மாணவன் எந்த மொழியில் பயிற்சி பெறவேண்டும் என்று நிர்ணயிப்பது, மாணவர் அல்லது பெற்றோர் என்பது சரியான நடைமுறைதானா என்பது பற்றிக் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டு சிந்தித்தால் நல்லதாக விருக்கும்.

கல்விக் கொள்கையினை வகுப்பது, அரசுதான் என்றால், அந்த அரசு அந்தப் பகுதி மக்களுக்குரிய அரசு என்றால், அந்த மக்களது மொழியிலேயேதான் கல்வி போதனையு மிருக்க வேண்டும் என்பது மட்டும் எப்படித் தவறானதாக விருக்கமுடியுமோ தெரியவில்லை.

இந்தி மொழி, இந்தியத் துணைக் கண்டத்தின் தேசிய கௌரவத்தைக் கொடுக்கிறது என்று கூறி, அதுவே இந்தத் துணைக் கண்டத்தின் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று நியாயம் கற்பிக்க முயலுவோர், ஒரு மாநிலத்தின் அரசு, அந்த மாநிலத்து பெரும்பான்மை மக்களது மொழியையே கல்வியின் பயிற்று மொழியாக ஆக்குவதைத் தவறு என்று எப்படிக் கூறத் துணிகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்திக்குத் தேசிய கௌரவம் பெறும் உரிமை கொடுக்கப்படுவது சரியென்றால், மாநில மொழியொன்று மாநிலக் கல்வி மொழியாக இருப்பது மட்டும் எப்படித் தவறானதாக விருக்க முடியும்?

தமிழ் நாடு அரசு, தன் கல்விக் கொள்கையை அறிவித்து, பயிற்று மொழி தமிழாகத்தா னிருக்க வேண்டும்; ஆனால் மெள்ள மெள்ள, ஆனால் உறுதியாக இது செயல்படும் என்றும் அறிவித்திருக்கிறது.

சென்ற கல்வி ஆண்டின் கணக்குப்படி புகுமுக வகுப்பில் பயின்றவர்களது எண்ணிக்கை 70,000-ல் சுமார் 18,000 மாணவர்களுக்கு மட்டுமே தமிழில் பயிற்சி தரப்பட்டிருக்கிறது, மீதமுள்ள 52,000 பேரும் ஆங்கிலப் பயிற்சியே பெற்றிருக்கிறார்கள்.

இந்த ஆண்டு இந்த இருவகை எண்ணிக்கையிலும் கொஞ்சம் உயர்வேற்படக் கூடும்.

கல்வியானது அறிவினைத் திரட்டிக்கொள்ளப் பயன்படும் ஒரு கருவியே அல்லாது, அதுவே வாழ்க்கைப்பாடு அல்ல. ஆனால் துரதிருஷ்டவசமாக நம் மக்களிடையே கல்வி ஒன்றுதான் வாழ்க்கைப்பாடு என்ற தவறான கருத்து புகுத்தப்பட்டிருக்கிறது; புகுத்தப் பட்டும் வருகிறது.

இந்த தவறான அடிப்படைக் கருத்தின் காரணமாகவேதான், கல்வி என்றதும், அதன் பயிற்று மொழிப் பிரச்னையும் வாழ்க்கைப் பாட்டோடு பிணைக்கப்பட்டு, பேசப்படுகிறது.

கல்லூரிகளின் பயிற்று மொழியானது வட்டார மொழியிலும், ஆங்கிலத்திலுமிருக்க வேண்டும் என்று மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள், இதையொட்டியே தினமணியும் தம் கருத்தை அறிவித்திருக்கிறது.

கல்லூரிகளைப் பொறுத்த மட்டில், மொழிப் பாடங்கள் அந்தந்த மொழியிலேதான் பயிற்றுவிக்கப்படுகின்றன, இன்று வரையில். தமிழே பயிற்று மொழியானாலும் ஆங்கிலம் என்று வருகிறபோது ஆங்கிலமே அங்கே பயிற்றுவிக்கப்படுகிறது.

முதலிடத்தைப் பெற்றுவந்த ஆங்கிலம், இரண்டாமிடத்துக்கு மாற்றப்படும்போது "தரம்" பற்றிய பிரச்னை கிளப்பப்படுகிறது. கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல், ஆங்கிலத்தில் குறிப்பிட்ட சதவீதம் மதிப் பெண்கள் பெற்றவர்களுக்குத்தான் ஆங்கில வகுப்பு என்று நிர்ணயிக்கப் பெற்று விட்டால், அதிக அளவு மதிப் பெண்கள் வாங்கவேண்டும் என்ற அக்கறை, உரியவர்களுக்குத் தானாக ஏற்பட்டுவிடக் கூடும் அப்போது அந்தத் தரமும் தரமுடையதாக விருக்கும்.

எனவேதான், தமிழ் மக்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தமிழிலேயே கல்வி பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று கோருவதிலே நியாயமிருக்கிறது என்கிறோம்.

ஆங்கில அறிவின் விஷயத்தில் தனி அக்கறை என்கிறபோது, பிரச்னை பெரிதாக நியாயமில்லை.

துணைவேந்தர் திரு சுந்தரவடிவேலு அவர்கள், குறிப்பிட்டிருப்பதுபோல் கல்வி விஷயத்தில் பெரியோர்கள் கருத்துக் கூறுவதுடன் நின்றுவிட்டால் நலமாக இருக்கும்! நிற்பார்கள், நிற்க வேண்டும் என்று நம்புவோமாக!




தன்னால் தந்தைக்கும் தனயனுக்கும் தகராறு விளைவதையும், அரச குடும்பத்திலே அமளி மூள்வதையும் கண்டு சகிக்க முடியவில்லை தவமணியால்! ஒரு பெண்ணின் பொருட்டு இளவரசர் இத்தனை இன்னலை அனுபவிப்பதா! அரசு இழந்து, சுற்றமிழந்து தவிப்பதா? இதற்கு நாம் இடந் தருவதா? என்று யோசித்தாள். காதலெனும் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த என் அண்ணனை விடுவிக்க தன் உயிரையே தியாகம் செய்யத் துணிந்தாள். "விசாரணையா? இளவரசரையா, விசாரிக்கப் போகிறார்கள்! வீணர்கள்; அவர்கள் விவேகமில்லாத ஆணவக்காரர்கள்; இருதயத்தின் துடிப்பை உணராத மூடர்கள்! என்ன செய்தாராம். என் பதி! உள்ளம் உரைக்கும் வழிப்படியேதான் நடப்பேன்! ஊராள்வோன் குறுக்கிட்டாலும் கவலை கொள்ளேன் என்று கூறினார். இது குற்றமா? பட்டவர்த்தனப் பேச்சு; சொல்லுக்கேற்ற செயல், பாண்டிய மண்டலத்திலே குற்றங்கள் போலும், காதல் என்ற உணர்ச்சி, அரண்மனைகளிலே நுழையாதபடி, மன்னர் சட்ட திட்ட மிடுவது, முடியுமா? நடக்குமா? ஆகுமா? மன்னராம் மன்னர்! நீதியாம் நீதி! இதற்கு ஒரு விசாரணையாம்! விசாரணை நடத்தட்டும் நாளைக்கு! விசாரணைக்கு கூடிடும் விவேகிகளை நான் கேட்கிறேன் சில கேள்விகள். பதில் கூறட்டுமே பார்ப்போம் அந்தக் கண்ணியர்கள்" என்று வியாழனன்று இரவு தவமணி தான் அடைபட்டிருந்த சிறையிலே கூவிக்கொண்டிருந்தாளாம். எப்போதும் அடக்கமாக இருக்கும் தவமணி அன்று ஆர்ப்பரித்தது கண்ட காவலாளிகள்கூடக் கொஞ்சம் கடிந்து தவமணியைக் கள்ளி என்றும் காமச் சேட்டைக்காரி என்றும் மிரட்டினராம். "தூ! கூலிக்கு வேலை செய்யும் கூளங்களே! வாயை மூடுங்கள்! என்ன தெரியும் உங்கட்கு நியாயம்! மந்தையிலே வாழும் உங்கட்கு மனதின் சுதந்திரம் என்ன தெரியும்? மன்னன் மொழிக்கு மறுமொழி இல்லையென்று கூறி, மண்டியிட்டு வாழ்ந்து, வயிறு கழுவுங்கள். அது உங்கள் நிலை, எனக்கென்ன? இந்த அரசன் எனக்கு ஒரு துரும்பு! இந்த உலகம் எனக்கு பிடிமண்! சட்டம் எனக்குச் சாக்கடைச் சேறு! என்னை யார் என்று தெரிந்துகொள்ள முடியாது உங்களால் இன்று! நாளைக்கு காணுங்கள் என்னை!! நான் யார் என்பது விளங்கும்!" என்று தவமணி ஆத்திரமொழி பேசினாளாம். அவள் உரைத்ததன் பொருள், வெள்ளி விடிந்ததும் விளங்கிவிட்டது. கார்மேகம்போல இருண்டு, மினுமினுப்புடன் விளங்கி, நீண்டு அடர்ந்து இருந்த கூந்தலே அவளுக்குக் கூர் வாளாகிவிட்டது. அதனைக் கொண்டே, சங்கு போன்ற கழுத்திலே சுருக்கிட்டுக் கொண்டு, சிறை அறையிலேயே, பிணமானாள் அப்பெண்! நோயின்றி நலிவின்றி இருந்தவள் திடீரென்று இறந்ததால், உடல் ஒரு துளியும் வாடவில்லை. சுருக்கிட்டுக் கொண்டிருந்ததால், விழி சற்று வெளியே வந்துவிட்டது. மற்றபடி அலங்கோலம் இல்லை. பொன்னாற் செய்த பதுமைப்போலக் காணப்பட்டாள். தவமணியின் தற்கொலை, ஊரைக் கலக்கிவிட்டது. என் தந்தையின் மனதைக் கரைத்துவிட்டது. என்னைக் குழப்பம் செய்துவிட்டது. இனி, என் அண்ணன் நிலைமையைக் கூறவும் வேண்டுமோ! ஆ! ஐயோ! தவமணி! தியாகவல்லி! கண்மணி உன்னை இழந்தேனா! என்று அவர் கதறியது கேட்ட, அரண்மனை வாசிகள், வேதனைப்படும் வேங்கை பேசவும் ஆரம்பித்தால் இப்படித்தான் இருக்கும்

என்று கூறினர். என் அண்ணனுடைய குரலிலே துக்கமும் கோபமும் கலந்திருந்தது.

தவமணியின் பிரேத விசாரணை நடந்தேறியது. இளமையும், எழிலும் கொண்ட நான் உலவ, இந்த அரண்மனை இடந் தரவில்லை. இது முறையா, என்னினும் எழிலுடைய மங்கை உண்டா, என்னைப் பார்த்துவிட்டுப் பதில் கூறுங்கள், என்று தவமணி கேட்பது போலிருந்தது. சட்டமும் பட்டாளமும், அரசரின் கோபமும் ஆள்வோரின் ஆர்ப்பரிப்பும், சிறையும் பிறவும், என்னை என்ன செய்ய முடியும் என்று கேட்டுச் சிரிப்பது போலவே இருந்தது அந்தப் பிணத்தின் கோலம்! பார்த்தவர்கள், பிரலாபிக்காமலில்லை! மனதிற்குள் மன்னனைத் தூஷிக்காமலில்லை. அன்று அரண்மனை முழுவதும் அலங்கோலமாகத்தான் இருந்தது. அந்தத் துக்கம் ஆற, ஒருவாரம் ஆயிற்று. இதற்கிடையே, என் அண்ணன் கொதிக்கும் எண்ணெய் நிரம்பிய கொப்பறையிலே வீழ்ந்தவரானார்! கோவெனக் கதறுவார்; சுவரிலே மோதிக்கொள்வார்; சோர்ந்து விழுவார்; சோறு உண்ணார்; சோகமே உருவானார். தவமணி இறந்தாளே தவிர, என் அண்ணன் மனதிலே மூண்ட காதற் தீ அணையவில்லை. அவள் இறந்தாள்; தந்தையும் தனயனும் ஒற்றுமைப்படுவர் என்று கூற முடியாத நிலை உண்டாகிவிட்டது. சிறையிலிருந்து விடுவித்தால், முதல் வேலை, என் காதலி தற்கொலை செய்துகொள்ள வேண்டிய நிலையை உண்டாக்கிய காதகனின் கழுத்தை முறிப்பதுதான்! என்று என் அண்ணன் கூறினார். வெறுங் கோபத்தோடு மாத்திரமல்ல. அசைக்க முடியாத உறுதியுடன், கேட்பவர் அச்சங்கொள்ளும் விதத்திலே! சிறைக் கதவுகளைத் தூளாக்குவேன்; கம்பிகளைப் பெயர்த்தெடுப்பேன்; சுவரினைப் பிளப்பேன் என்று இடி முழக்கமிடலானார். காவலாளிகள் பயந்தனர்! துணை தேடினர். மன்னர் மிரண்டார். தவமணி இறந்ததுடன் ஆபத்தும் நெருக்கடியும் ஒழிந்தது என்று கருதினேன்; புதிய ஆபத்து புறப்பட்டுவிட்டதே! வேதனை இவனுக்கு வெறியூட்டிவிட்டது. இதற்கென்ன செய்வேன் என்று கதறினார். மீண்டும் நான் தூதனுப்பப்பட்டேன்அண்ணனிடம். என்னைக் கண்டதும் அவர் கோவெனக் கதறி, இப்போதாவது திருப்தி உண்டாயிற்ரு அதிகார ஆணவம் பிடித்தலையும் உன் தந்தைக்கு? என் கண்ணைத் தோண்டி எடுத்துவிட்டார்; காரிருள் மயமே இனி எனக்கு இவ்வுலகம் என்று கூறினார். நெடு நேரத்திற்குப் பிறகே, அவருக்கு ஓரளவு ஆறுதல் பிறந்தது. பிறகு நான், மன்னர் மிரண்டிருப்பதைக் கூறினேன். மகனுக்குத் தந்தை பயந்து வாழும் நிலைமை கூடாது என்று வாதிட்டேன். மன்னரின் உயிர் பிரியின் தவமணி மீண்டும் வாராளே என்றுரைத்தேன். மிகப் பக்குவமாகப் பேசித் தந்தையைக் கொன்றுவிடத் துணிந்த என் அண்ணனின் எண்ணத்தைக் கொன்றொழித்தேன். பிறகு, அவருடைய எதிர்காலத்தைப் பற்றிய பேச்சு எழுந்தது, வாழ்க்கையிலே எழும்பிய புயல் அடங்கிவிட்டது. இனி பழையநிலை அடைவதுதான் முறை என்றும், கொந்தளிக்கும் கடலிலே உலவும் மரக்கலம் பிறகு துறைமுகம் சேர்ந்துதானே தீரவேண்டும் என்றும் நான் உபமான உவமேயங்களுடன் பேசினேன் அவரோ; தீயினாற்சுட்ட புண் ஆறும்: ஆனால் நாவினால் சுட்டவடு ஆருது. நோய் தீரும்; ஆனால் உள்ளம் ஒடிந்தால், ஒட்டுவித்தை நடக்காது என்று உரைத்துவிட்டார். "இனி எனக்கு இங்கு வேலை கிடையாது. என் வேலை இனி உலகைச் சுற்றுவது. கானாறும், காடும், குன்றும், குடிசையும், மணல் வெளியும், முட்புதரும், எனக்கு இனி தோழர்கள். உங்கள் அரண்மனையிலே அழகிகள் ஆடுவர், பாடுவர், இனிக் காடுகளிலே, தோப்புகளிலே பறவைகள் பாடிடக் கேட்டு இன்புறுவேன். பனி நீரில் குளித்துப் பட்டாடை பூண்டு, பட்டத்தரசனாகும் வேலை எனக்கு வேண்டாம். என்னை இனிப் பாண்டிய நாடு, உயிரோடு பாராது! இன்றே இப்போதே, பட்டத்து உரிமை, அரண்மனை வாழ்வு, பாண்டிய நாட்டு வாசம் எல்லாம் துறந்தேன். இன்றிரவு ஊரடங்கியதும், எனக்கு நாடு கடக்க உத்தரவும, ஒரு வாள், ஒரு புரவி, பட்டத்துக்கு அரசியாகும் பேறு பெறுபவன் அணிவதற்கென நமது பொக்கிஷத்திலே உள்ள நீலமணி ஆகியவற்றினைத் தரவேண்டும். நான் ஏறவேண்டிய பீடத்திலே நீ வீற்றிருக்கலாம். ஆனால் என் தவமணி அணிந்திருக்கவேண்டிய நீலமணியை, பாண்டிய நாட்டு ராணி யாரும் அணியக்கூடாது. இந்த என் வேண்டுகோளை நிராகரித்தால், நாளைக் காலை என் பிரேத விசாரணையைப் பாண்டிய மன்னர் நடத்தட்டும்! அவருக்குத்தான் பிண விசாரணையிலே பழக்கமிருக்கிறது!!" என்று அண்ணன் கூறினார். வாழ்க்கையை அவர் எவ்வளவு வெறுத்துவிட்டார் என்பது அவருடைய பேச்சிலே தோய்ந்து கிடந்தது.

நடனா! "கடைசி முறையாகக் காணவேண்டும்; நான் வயோதிகன்; அவன் மீண்டும் இங்கு வருவதானாலும்கூட, நான்உயிரோடு இருக்கமாட்டேனே. இன்றிரவு ஒரேமுறை அவனைக் கண்டு அணைத்துக் கொண்டால்தான் என் மனம் கொஞ்சம் நிம்மதி அடையும்'' என்று மன்னர் கெஞ்சினார். "என்னை அவர் பார்க்கக்கூடாது! தவமணியின் மரணத்துக்குக் காரணமாக இருந்த அவரைக் கண்டதும், என் கரங்கள் அவருடைய கழுத்தை நெறித்துவிடும் என்று அண்ணன் கூறிவிட்டார். அன்றிரவு நடுநிசியில் நீலமணியை நான் எடுத்துச் சென்று அவரிடம் தந்தேன்; கண்களிலே நீர் புரள நின்றேன்; காலிலே வீழ்ந்து பணிந்தேன். ஒரு விநாடி அவருக்கு என்னிடம் கனிவு எழும்பிற்று; கட்டித் தழுவினார், மறு விநாடி பழையபடி நின்ருர். குதிரை ஏறினார். பறந்தார் அரண்மனைத் தோட்டத்தைவிட்டு. அன்று கண்டதுதான் அவரை. நடனா! பிறகு, இதோ நீலமணியைக் கண்டதும், அவரைக் காண்கிறேன்" என்று பாண்டியன் தன் அண்ணன் வரலாற்றினைக் கூறி முடித்தார்.

"பாண்டிய மண்டலத்தைத் துறந்தவர், பல் வேறு நாடுகள் சென்று, கலிங்கத்திலே தங்கினார். அக்காலத்திலேதான், மலர்புரியை மயக்கிய ஆரிய முனிவனின் தந்திரத்தால், மலர்புரிராணியின் மனோஹரனாக இருந்தார்; நடனா பிறந்தாள்! முதற் காதலைப் போலவே, மலர்புரி காதலும் சரிந்தது. பின்னர் கலிங்கப்போரிலே மாண்டார், காதலுக்காகப் பட்டத்தைத் துறந்தஉன்தந்தை! மலர்புரி ராணியே, நீ சோழமண்டல ஆடலழகியாக இருந்தபோது, வனபோஜன விழாவிலே கண்டு, நீலமணியை எடுத்துக்கொண்டு வந்தாள். உன்னைக் காண்பதற்குப் பதிலாக நீலமணியையாகிலும் காண்போம்.

என்றுபோலும்! இவ்விதமாகத்தான் விஷயம் இருந்திருக்க வேண்டும் என்று யூகிக்கிறேன். ஆனால் ஒரு விஷயம் புலனாகவில்லை. அவரிடமிருந்த நீல மணி, உன்னிடம் எப்படி வந்தது என்பது தெரியவில்லை. இந்நீலமணியை உனக்குத் தந்தது யார்? என்று பாண்டிய மன்னன் நடனாவைக் கேட்டார். "இது என் வளர்ப்புத் தாய் தந்தது. அவள் அரண்மனைப் பாங்கி" என்று நடனா கூறினாள். பாண்டிய மன்னர் சிரித்துக்கொண்டே, தவமணியை இழந்து, மலர்புரி அரசியைப் பெறுமுன், இடையே அந்தப் பாங்கிக்கு காதலனாக இருந்திருப்பார்! சரி, எப்படியோ ஒன்று, நீலமணி உனக்குத்தானே சொந்தம். தந்தையின் சொத்து, மகளுக்குத்தானே! என்று கூறினார் மன்னர்.

சின்னாட்களிலே, மன்னர் மாறுவேடத்திலே, மலர்புரி சென்று நடனராணி வரலாற்றினை அரசிக்கு எடுத்துரைத்தார். "என் வாழ்க்கை முழுவதும் விசாரமே குடிகொண்டிருந்தது. இந்தச் செய்தி எனக்கு இனி புத்துயிர் தரும். அன்று சோழருடைய வனபோஜன விழாவுக்கு நான் மாறுவேடத்தில் சென்றபோது, நடனா வெளியிலிருந்து வரவழைக்கப்பட்டாள் என்றும், சோழ மண்டலத்திலே நிரந்தரமாகத் தங்குபவள் அல்லவென்றும் ஆரியன் கூறினான். அதனாலேயே நான், நடனாவை மீண்டும் காணமுடியாமற் போய்விட்டது. நடனாவின் காதலனை நான் கொடுமைக்கு ஆளாக்கினேன். என் செய்வது? ஆரியத்திடம் சிக்கிய நான் அறிவிழந்தேன். மன்னரே! மாறுவேடத்துடன் இங்கு வந்து, என் வாழ்வு துலங்கும் வாசகம் உரைத்தீர். இனி ஒரு காரியம் உம்மால் ஆகவேண்டும். எப்படியும், நடனாவும் வீரமணியும், மலர்புரியை ஆள வழி செய்ய வேண்டும். ஆனால் நடனா, என் விபசாரத்தில் பூத்தமலர் என்பது மட்டும் தெரியக்கூடாது. உலகம் என்னை நிந்தனை செய்யுமே என்பதல்ல என் கவலை! நடனாவுக்குப் பழிசொல் பிறக்குமே என்றே நான் கவலை கொள்கிறேன், அவளை—என் மகளை—அருகே அழைத்து. அணைத்து முத்தமிட்டு வாழ, என் மனம் தூண்டுகிறது; மானம் குறுக்கே நின்று தடுக்கிறது. "மலர்புரி மக்களே! இதோ முழுமதி போல் முகமும், பூங்கொடிபோல் உடலும், பொன் குணமும் கொண்ட என் மகளைக் காணீர்! அவளுடைய கணவனைப் பாரீர்! எதிரியைக் கதிகலங்கச் செய்யும் தோள்வலியுடையான், என் மகளின் மனக்கோயிலின் தேவன்; என் மருமகன், வீரமணியைப் பாரீர்! இனி இவர்களே உங்களின் அரசன், அரசி" என்று மக்களிடம் கூறிக் குதூகலிக்க என் உள்ளம் கூறுகிறது. ஆனால், நடனா என் விதவைக் கோலத்து விருந்தின் விளைவு என்பது வெளிப்படுமே, என்ற எண்ணம், வேதனையை ஊட்டுகிறது. நான் என் செய்வேன்! புதையலின் மீது புலி படுத்துக்கிடக்கிறது; வீணையின் நரம்பைச் சுற்றிக்கொண்டு விஷப்பாம்பு இருக்கிறது. இதற்கென்ன செய்வேன்? பேதமையினால் கெட்ட எனக்கு, என் சொந்த மகளிடம் ஊரறியப் பேசவும் முடியவில்லையே! என் கரத்தினால் மணிமுடியை அவளுக்குச் சூட்டி மகிழக் கருத்து எழுகிறதே; கரம் அதற்குப் பயன்பட முடியாத நிலையிலன்றோ இருக்கிறது. மலர்புரி ராணி விபசாரியாக இருந்தாளாம் என்ற சொல் மட்டுமா? மலர்புரியின் ராணி நடனா, விபசாரியின் மகள், என்று வீணர்கள் உரைப்பரே வேற்று நாட்டவர் இழித்துப் பழித்துப் பேசுவரே! அவளுக்கு உரிமையுள்ள, இந்த மண்டலத்தை அவள் அடையமுடியாதபடி, என் நிலைமையன்றோ குறுக்கிடுகின்றது" என்று மலர்புரி அரசி சோகித்தாள்.

"தந்தையின் நிலையேதான் போலும் மகளுக்கும்! அவர் ஆளவேண்டிய பாண்டியநாடு, அப்பேறு பெற முடியாது போயிற்றல்லவா?" என்று மன்னர் பெருமூச் செறிந்தார். மலர்புரி அரசி, "நான் மறந்தே விட்டேன். அவர் பாண்டிய குமாரர் என்பதைத் தாங்கள் கூறினீர்களே! என் மகளின் நினைப்பு எனக்கு, அந்த அதிசயத்தைச் சாதாரணமனதாக்கிவிட்டது அவர் ஒரு மறத் தமிழர் என்றுதான் நான் எண்ணியிருந்தேன். இப்போது உமது மொழியே எனக்கு அவர் அரச குடும்பத்தில் உதித்தவர் என்பதை உணர்த்திற்று" என்றாள்.

"அது சரி! ஆனால், தாங்கள்தான், "தேவன்" என்று அவரைக் கருதினீரே, மனிதராகவே எண்ணவில்லையே!" என்றார் மன்னர், வேடிக்கையாக. "உண்மைதான்! எனக்கு அவர் தேவன். அதில் சந்தேகமில்லை." என்று அரசியார் கூறிவிட்டு, "முக்கியமான விஷயத்திற்கு என்னபதில் கூறுகிறீர்? நடனா மலர்புரியை ஆளவேண்டும்; அவள் என் மகள் என்பதும் தெரியக்கூடாது! இந்தச் சிக்கலைத் தீர்த்துவைக்க வேண்டுமே! என்று கேட்டிட மன்னன் சிரித்துக்கொண்டே, தாங்கள் கூறிக்கொண்டிருக்கும்போதே நான் ஓர் வழி கண்டுபிடித்துவிட்டேன்" என்று சொன்னான். மார்க்கமிருக்கிறதா, மன்னரே!" என்று மலர்புரி அரசி கேட்டாள்.

விதவைக் கோலத்திலே பெற்ற காதல் விருந்தின் விளைவான நடனா நாடாள, வழி இருக்கிறது; அதே சமயத்தில், ஊர் நிந்தனை பிறவாதபடி தடுக்கவும் வழி இருக்கிறது என்று பாண்டிய மன்னர் கூறிடக் கேட்ட மலர்புரி அரசி மகிழ்ந்து, "என்ன வழி? எனக்குக் கூறுங்கள் விரைவாக" என்று ஆவலுடன் கேட்டாள்,

"அரசியாரே! என் திட்டம் சுலபமானதுதான். ஆனால் அதற்குச் சோழனுடைய ஆதரவு வேண்டும் என்று பாண்டியன் கூறிடக் கேட்ட மலர்புரி, அரசி, 'சோழமன்னருக்குஉமதுதிட்டம்பிடிக்காமல்போனால் என் செய்வேன்' என்று கேட்டாள் ஏக்கத்துடன். "அரசியாரே, அஞ்சாதீர். மலர்புரிக்கு மாறுவேடத்திலே வந்தது போலவே, சோழமண்டலம் செல்கிறேன். வரலாறு முழுவதையும் மன்னருக்கு உரைப்பேன். வீரமணியின் மீது சோழ மன்னர் கொண்டுள்ள கொதிப்பை மாற்றுவேன். உண்மை தெரிந்த பிறகு அவரே வீரமணியை வரவேற்பார். தவற்றை வேண்டுமென்றே செய்யும் மன்னர்களும் தமிழ்த் தரணியில் உண்டா! என் திட்டத்தையும் அது எந்நோக்குடன் செய்யப்படுகிறது என்பதையும் சோழருக்குக் கூறுவேன். அவரும் இசைவார் என்றே நம்புகிறேன்" என்று பாண்டியன் கூறினார். அரசியார் ஒருவாறு மனந்தேறினாள். ஆனால் மறுகணமே, திகிலுடன் "அது சரி, பாண்டிய பூபதி! தங்கள் திட்டம் என்ன? அதைக் கூறவில்லையே" என்று கேட்டாள். பாண்டியன் புன்னகை பூத்த முகத்துடனே, மலர்புரி மீது, வீரமணி படை எடுத்து வருவான். போர் மூளாமுன்னம் தூதுவிடுவான்.

(11-ம் பக்கம் பார்க்க)

# வினா-விடை

தங்க. கலையரசு. கருக்குப்பேட்டை.

இலட்சியவாதி ஒருவனுக்கு வாய்க்கும் மனைவி, எத்தகைய குண நலன்கள் பெற்றவளாயிருந்தால், தன் கணவனின் இலட்சியத்திற்குத் துணை புரிய முடியும்?

பெண்கள் எல்லாருமே ''வாசுகி''களாக இருந்துவிட முடியாது. அதுபோலவே எல்லாருமே ''தாடகை''களாகவுமிருப்பதில்லை. மனைவி என்பவள், ஒரு பெண் தோழிதான். தோழன் ஒருவன். தன் நண்பனுக்கு எப்படியெல்லாம் நட்புரிமையுடன் உதவி செய்ய முடியுமோ, அந்த அளவுக்குத்தான் தோழியாக வந்திருக்கும் மனைவியிடமும் எதிர்பார்க்க வேண்டும். ஆனால் இந்தக் காலத்துப் பெண்களும், ஆண்களும் ''வாழ்க்கை'' என்பதனை, எப்படி உணர்கிறார்கள் என்பதே ஐயப்பாட்டுக்குரியதாகி இருக்கிறது. ஒருகால் நாகரிக வளர்ச்சியும், பண்பாட்டுச் சீரழிவும் இவற்றிற்குக் காரணங்களாக இருக்கலாம். இலட்சியவாதி என்பவன், தன் மனைவியை ஒரு அடிமை என்று கருதமாட்டானே! துணை தோழியிடமிருந்து கிடைக்காமலா போகும்?

* * *

எழுத்தார்வமிக்க இளைஞர்களை ஊக்குவிக்கும் முறையில் 'காஞ்சி'யில், இளம் எழுத்தாளர்களுக்கு இடமளித்தால் என்ன?

''காஞ்சி''யின் பெரும்பான்மையான இடங்களை, நீங்கள் குறிப்பிடுபவர்கள்தான் ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள். 'காஞ்சி'- தன் கருத்துக்களை கூறவேண்டியிருக்கும் சில சந்தர்ப்பங்களில், இந்த ''ஆக்கிரமிப்பை'' எதிர்த்தல்லவா போராட வேண்டியிருக்கிறது!

த. சிவசுப்பிரமணியன், மணச்சநல்லூர்.

தமிழ்ப் பற்றும், தமிழ் வளர்ச்சியில்அக்கறையும் கொண்ட இன்றைய தமிழக அரசு, தமிழை உலகமெல்லாம் பரவச் செய்யும் முயற்சியில் ஏன் இறங்கக்கூடாது?

ஒரு உத்திரவின் மூலம், நிறைவேற்றிவிடக் கூடியதல்லவே இது! தமிழ் நாட்டுக்குள்ளேயே இன்னும் பல்லாயிரக் கணக்கானவர்களைத் ''தமிழர்''களாக ஆக்க வேண்டியிருக்கிறதே! தமிழ், தன்னைத்தானேயும் வளர்த்துக் கொண்டு, தமிழர் என்பவர்களையும் வளர்த்து வருகிறது. எதிர்காலம், உங்கள் விழைவுக்குச் சீரிய விடை தருவதாக நிச்சயம் இருக்கும்!

* * *

உடைந்துபோன இரு காங்கிரசும் ஒன்று சேர இனி வழியே இல்லையா?

குளச்சல் தொகுதி தேர்தல் சமயத்திலும் காங்கிரஸ் உடைந்து போனதாக நம்பமுடியவில்லை. திருவண்ணாமலை மாநாட்டு நிகழ்ச்சிகளும் அப்படி எடுத்துக் காட்டவில்லை. ''எனக்கு இரண்டு கண்களும் கெட்டுப் போனாலும் சரி, இந்திராவின் ஒரு கண்ணாவது கெட்டொழிய வேண்டும்'' என்ற போக்கில்தான் சிலபேர் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் தமிழகத்துக்குள்ளே ''பிளவு''போல தோற்றமளிக்கிறது. இந்நிலையில் ''ஒட்டு வேலை'' பற்றிய கவலை நமக்கெதற்கு?

மு. புகழேந்தி, குரிச்சிமலை.

இலங்கைத் தேர்தலில் ஏற்பட்ட திருப்பம் காரணமாக, அரசாங்க மட்டத்தில் பெரும் அளவுக்குக் ''களை எடுப்பு'' நடைபெறுவதாக வரும் செய்திகள் நம்பத்தக்கவை தானா?

இந்தியாவின் இலங்கைத் தூதரே திருப்பி அழைக்கப்படவிருக்கிறார் என்று செய்தி வந்திருக்கிறது. அல்லாமல் இலங்கை ஏடுகளும் இவை போன்ற குற்றச்சாட்டுக்களை எழுப்பி இருக்கின்றன. டட்லியின் ஆதரவு ஏடு ஒன்றுகூட தாக்கப்பட்டிருக்கிறது! எல்லா ...ற்றையும் இணைத்துப் பார்த்து ...கொள்ளுங்களேன்!

க. மருதவாணன். காரைக்கால்.

பசு வதைத் தடைக் கிளர்ச்சி மீண்டும் தொடங்கப் போகிறதாமே, என்ன நடக்கும்?

எல்லாம் நடக்கும். 'ஆனந்த விகடன்' இதழ் குறிப்பிடுவது போல, நக்சல்பாரிகள் ஒரு பக்கமும், மத - இன வெறியர்கள் மறு பக்கமும், அரசியல் வாதிகள் வேறோர் பக்கமும், குழப்பவாதிகள் இன்னோர் பக்கமும் துணைக் கண்டத்தைத் துவம்சம் செய்து கொண்டிருக்கிற இந்த வேளையில்; இந்தப் போராட்டமும் அனுமதிக்கப்பட்டால் என்னதான் நடக்காது. சென்ற முறை நடந்த கிளர்ச்சியை ஒருமுறை மனத் திரையில் கொண்டு வாருங்கள்! படம் பளிச்செனத் தெரியுமே!

கு. பிரான்சிஸ், திருவாடானை.

கிறித்துவர்கள் மீது காங்கிரஸ்காரர்களுக்குப் பற்றுதல் ஏற்பட்டுவிட்டதா என்ன? பேச்சுக்களும் எழுத்துக்களும் ஒருமாதிரியாகிக் கொண்டிருக்கிறதே?

ஆமாம்! பெரும்பான்மை இனம்—சிறுபான்மை இனம் என்பதன் பேரால் இப்போது அலாதியான ஒரு பற்றுதல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. 'ஓட்டுகள்' விழாமற் போய்விட்ட பின்பு, வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிக் கொள்ளும்! எதிர்பாருங்கள்!

பொ. சீதாராமன். சென்னை.

''பிருமணாள் ஓட்டல்'' காஞ்சிபுரத்திலிருக்கிறதா?

ஏராளம்! ஏராளம்!! நேரடி நடவடிக்கை மூலம்தான் ஒழிக்க முடியும் போல் இருக்கிறது—அந்தப் பெயர்ப் பலகைகளை!

கே. குப்புசாமி, காஞ்சிபுரம்.

''தமிழ் நாட்டின் அடுத்த முதலமைச்சர் யார்?'' என்று ஒரு நாறும் ஏடு கேட்டிருக்கிறது. இது எப்படி இருக்கிறது?

அந்த இதழின் இதயம் எப்படி இருக்கிறது என்பதைக் காட்டுகிறது இது, ''பாவிகள் அவர்கள். அறியாமல் பிழை செய்திருக்கிறார்கள். கர்த்தரே! அவர்களையும் மன்னியுங்கள்'' என்ற பிரார்த்தனையை, நாமும் ஒருமுறை சொல்லி வைப்போம்!

# திரும்பிப் போனவர்

உடுமலை நன்னன்

மாலைநேரம் மணி நான்கு இருக்கும். எழுத்தாளர் மாசிலாமணி தூக்கம் கலைந்தும்கூட படுக்கையை விட்டு எழாமல் கூரையைப்பார்த்த வண்ணம் எதைப்பற்றியோ சிந்தனையில் இருந்தார்.

அவர் சிந்தனையில் மூழ்கியிருப்பது புதுமையானதல்ல. அவருடைய தொழிலே எழுத்துப்பணி. அதனால் அவர் சிந்தனை செய்வது இயல்புதான். ஆனால் ஒரு எழுத்தாளன் என்பவன் சிந்தித்துக் கொண்டிருக்கின்ற எதையுமே இலக்கியப் படைப்புக்காகவே சிந்திக்கிறான் என்று தீர்மானித்து விடுவது சரியானதாகுமா?

மாசிலாமணியைப் பொருத்த அளவு இலக்கியச் சிந்தனை மட்டும் தான் தொடர்ந்து அவர் மன மாளிகையில் கோலோச்சிவந்தது. இன்று நேற்றல்ல, நீண்ட நெடுங் காலமாக. இப்போது அந்த மன மாளிகையில் வேறொரு சிந்தனை!

வேறொரு சிந்தனையா? வியப்படையவேண்டிய கேள்விதான்.

எழுத்தாளர் மாசிலாமணிக்கு இப்போது வயது அறுபதுக்கு மேலாகிவிட்டது. அவர் கண்ணாடி முன் நின்று தன்னைப்பார்க்கும் போதெல்லாம்அவருடைய நரைத்த தலையும் மட்டமாக வெட்டி விடப்பட்ட வெளுத்துப்போன மீசையும் அவருடைய இளமையை கொஞ்சம் கொஞ்சமாகத் தின்றுவிட்டதை உணர்ந்து, தன்னையும் அறியாமல் சிரித்துக்கொள்வார். அவருடைய கன்னக்கதுப்புகளோ கட்டுப்போடப்பட்ட உடைந்த கரும்பலகைபோல லேசான கீறல்களாகத் தெரியும்.

காலமகள் போடுகின்ற கோலங்கள்தான் எத்தனை வகையாய் இருக்கின்றன. எண்ணினால் வியப்பு, சிலபோது மலைப்பு.

கூரையைப் பார்த்தபடி சிந்தனையிலிருந்த மாசிலாமணி மெதுவாகப் படுக்கையைவிட்டு எழுந்தார். வாசல் கதவைப் போய் திறந்து வைத்துவிட்டு நேராக குளியல் அறைக்குப் போனார் முகம் கழுவ. அவர் எப்போதும் காலையிலேயே குளித்துவிடுவார்.

அவர் முகம் கழுவிக்கொண்டு வந்தார். அதே சமயம் அவருக்கு எதிர்ப்புறமிருந்து வேகமாக வந்த லதா கலுக்கென்று சிரித்தாள். அவள் சிரிப்பதைக் கண்ட மாசிலாமணி "என்ன லதா வரும்போதே சிரிப்பு" என்றார்.

"உங்களைப் பார்த்துத்தான்!" என்றாள் அவள்.

"என்னைப் பார்த்தா?"

"ஆமாம், இப்படி வாங்களேன்" லதா அவர் கையைப்பிடித்து அழைத்துவந்து கண்ணாடி முன்னால் நிறுத்திவிட்டு "உங்க முகத்தைப் பாருங்க" என்றாள்.

கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தார் மாசிலாமணி. அவருக்கே சிரிப்பு வந்துவிட்டது. முகத்தின் வலப்பக்கக்காதோரம் சோப்பு நுரை அப்படியே அப்பியிருந்தது.

"சரியாக்கழுவலே" என்று அவர் சொல்லச் சொல்ல லதா ஒரு கைத்துண்டைக் கொண்டுவந்து கொடுத்து "முகத்தை நல்லாத் துடையுங்க" என்றாள். அவர் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு திரும்பி லதாவைப் பார்த்தார். அவளை அங்கே காணவில்லை.

"லதா" என்று சொல்லிக் கொண்டே அவர் சமையல் கட்டுப் பக்கம் போனார். அங்கே லதா ஸ்டவ்வில் எண்ணெ ஊற்றிக்கொண்டிருந்தாள்.

"லதா என்ன செய்யறே?" மாசிலாமணி சிரித்துக்கொண்டே கேட்டார்.

"காபி போடப் போறேன்" என்றாள் அவள். அவளுடைய ஆர்வமும் மணிக்குரலான பேச்சும் மாசிலாமணியின் உள்ளமெல்லாம் மகிழ்ச்சியை வெள்ளமாக நிரப்பி விட்டது. அவர் சொன்னார். "லதா இன்னிக்கு நீ காபி போடாதே" என்றார். அவளுக்கு முகம் சுண்டி விட்டது

"ஏன் நான் போட்டா காபி ருசிக்காதா?" என்றாள்.

"இல்லே லதா, தினமும் நீதானே காபி போடறே. இன்னிக்கு மட்டும் ஓட்டலுக்குப் போவோம். உனக்கும் ஓய்வா இருக்கட்டும்" என்றார் மாசிலாமணி.

"அதெல்லாம் வேண்டாம்...... எழுத வேண்டியது ஏதாவது இருந்தா அதைப் பாருங்க. நான் ஒரு நொடியில் காபி போட்டுக் கொண்டு வர்றேன்." லதா சொன்னால் அவ்வளவுதான், மாசிலாமணி மறுக்க முடியாது. அவர் தன்னுடைய எழுதும் அறைக்குப் போனார். போனவர் எதையோ தேடினார். அப்போது லதா வந்து "என்ன தேடறீங்க. நேற்று எட்டாவது அத்தியாயம் முடிச்சாச்சு. இன்னிக்கு ஒன்பது துவங்கணும்" என்றாள்.

"ஓ!......ஆமா...... அதைத்தான் யோசித்தேன்." என்று சொல்லிக் கொண்டே மாசிலாமணி ஒரு வெள்ளைக் காகிதத்தை எடுத்து அத்தியாயம் ஒன்பது என்று எழுதிவிட்டு உட்கார்ந்தார். தொடர்ந்து எழுதுவதற்கு.

சிறிது நேரத்தில் லதா காபியுடன் வந்தாள். "இந்தாங்க காபி. சூடா இருக்கு; குடிச்சிட்டு எழுதுங்க" மாசிலாமணி காபியை வாங்கிக்கொண்டார்.

"நான் வீட்டுக்குப் போறேன்" என்றாள் லதா. "ஏதாவது வேலையா?" என்றார் மாசிலாமணி.

"ஆமா" என்று சொல்லிக் கொண்டே அவருடைய முகத்தைப் பார்த்து புன்முறுவல் பூத்தாள் லதா.

"சரி போயிட்டு வா" என்றார் அவர். அவளும் புறப்பட்டாள்.

அவளுடைய காபி எப்போதுமே தனிச் சுவையானது. காபியைக் குடித்துவிட்டு மாசிலாமணி எழுத வேண்டிய வேலையைச் செய்யவில்லை, அத்தியாயம் ஒன்பது என்று எழுதப்பட்ட வெள்ளைக் காகிதத்தை அப்படியே போட்டுவிட்டு எழுந்து தன்னுடைய படுக்கை அறைக்குப் போனார். கட்டிலில் உட்கார்ந்துகொண்டு எதையோ யோசித்தார், திடீரென்று எதிர்ப் பக்கச் சுவரைப் பார்த்தார்,

சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு போட்டோவில் ஒரு அழகான பெண் புன்னகையுடன் காணப்பட்டாள். அந்தப் பெண்ணின் பெயர் மீனா. ஆமாம், மாசிலாமணியின் மனைவிதான் அவள்.

அவளைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசவேண்டிய சூழ்நிலை ஏற்படும் போதெல்லாம் மாசிலாமணி சொல்லுவார் 'அவள் ஒரு மல்லிகைப்பூ' என்று. அந்த மலருக்கு மணம் மட்டும் சிறப்பானதல்ல. விரிந்த இதழ்கள் அளவோடு காணப்படுகின்றன. அந்த அளவே அடக்கத்தின் குறிப்பாகத் தெரிகிறது. இதற்கெல்லாம் மேலாக வெண்மை நிறம், அது தூய்மையின் எடுத்துக் காட்டாக இருக்கிறது. அதில் அகம், புறம் இரண்டும் உண்டு.

ஊழ்வினையின் வலிமை மிகப் பெரியது மீனா மாசிலாமணிக்காகவே பிறந்து வந்தாள். அவருக்கு மனைவியாகி வாழ்ந்து இன்பம் தந்து இதயமெல்லாம் பழத்தோட்டமாக்கிவிட்டுப் போய்விட்டாள். ஆமாம். மாசிலாமணியுடன் கொஞ்ச நாள் வாழ்ந்தவள் இடை நாளில் சாவு என்னும் துணைவனுடன்போய் விட்டாள், சாவுக்கு ஒரு காரணம் வேண்டுமா? சாவே ஒரு காரணம் தான்!

ஊழ்வினைக்குத்தான் வலிமை அதிகமாயிற்றே. அதன் வலிமை ஆளுகிறது. எப்போதும், எல்லோருக்கும் மேலாக. ஏன்? எல்லாவற்றுக்குமே மேலாக. அப்படி மாசிலாமணி அடிக்கடி எண்ணிக் கொள்வார்.

மனைவியின் புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அவருக்கு கண்களில் நீர் சுரந்து காணப்பட்டது. குழந்தையைப்போல கண்களை கசக்கிக்கொண்டார். அவர் மனம் சொல்லிக் கொண்டது: 'சிறப்பும் பெருமையும் தரக்கூடிய எதையுமே மனிதன் வேகமாக இழந்துவிடுகிறான் என்று. மாசிலாமணி தன் மனைவியை இழந்து, பெரும் துன்பத்துக்கு ஆளாகியது இன்று நேற்றல்ல நாற்பது வருடங்களுக்கு முன்பிருந்தேதான். அவருக்கு இருபது வயதில் திருமணம் நடந்தது. இருபத்தி இரண்டாவது வயதில் நடக்கக்கூடாதது நடந்தது, அன்று மனைவியை இழந்தவர் இன்றுவரை—தன்னுடைய காலங்களையெல்லாம், நேரங்களையெல்லாம் எழுதவும், சிந்திக்கவுமே ஒதுக்கிவிட்டார்.

இலக்கிய உலகத்தில் அவருக்கு ஒரு தனி முத்திரை. அவருடைய நாவலோ. சிறுகதையோ வெளியிடாத பத்திரிகைகளே கிடையாது என்று சொல்லலாம். இப்படிப்பட்ட புகழ் அவருக்குக் கிடைக்கவேண்டும் என்பதற்காகத்தான் மீனா வாழ்வின் துவக்கத்திலேயே அவரைப் பிரிந்துபோய்விட்டாளோ?

மீனாவின் பிரிவுத் துன்பத்தால் மாசிலாமணி சொந்த ஊரையும் பிரிந்து மலைநாட்டுக்கு வந்து சேர்ந்தார், இப்போது அவர் இருப்பது மலைநாடுதான்.

இங்குவந்து பத்து வருடம் ஆகிவிட்டது. அவர் வந்த புதிதில் அவரைப்பற்றி யாருக்குமே தெரியாது. மலை நாட்டில் பிரபல எழுத்தாளர் இருக்கிறார் என்பது கொஞ்ச நாட்களுக்குப் பிறகுதான் அவ்வூரார் அறிந்தனர். அந்தச் சமயம்தான் லதாவும் தெரிந்துகொண்டாள். உடனே மாசிலாமணியைப் பார்க்க வேண்டுமென்று அவரைத்தேடிக் கொண்டு வந்து சேர்ந்தாள். கதையும், நாவலும் அவளுக்கு உயிர். குறிப்பாக மாசிலாமணியின் படைப்புகள் எல்லாவற்றையுமே விரும்பிப்படிப்பவள். மாசிலாமணியிடம் வந்து தன்னைப்பற்றி அறிமுகம் செய்துகொள்ளும்போது சொன்னாள்:

"உங்ககதையும், நாவலும்எனக்கு ரொம்பப்பிடிச்சிருக்கு. நீங்க படைக்கிற ஒவ்வொரு படைப்பும் ஏதாவது ஒருவகையில் சிந்தனையைத் தூண்டுது" என்றாள். மாசிலாமணி அவளுடைய ஆர்வத்துக்கு தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். இதுதான் அவருக்கும் அவளுக்கும் ஏற்பட்ட முதல் சந்திப்பு, பேச்சு எல்லாமே.

லதா ஒரு ஓவியருடைய மகள். மாசிலாமணி இலக்கியத்தில் எப்படி புகழ்க்கொடி நாட்டியிருக்கிறாரோ, அதேபோல லதாவின் தந்தை உயிரோட்டமுள்ள ஓவியங்கள் வரைந்து புகழ் பெற்றவர். அவருடைய ஓவியங்களைக் காண்பதற்காக ஓய்ந்த நேரங்களில் மாசிலாமணி அவரிடம் போவார். இந்தத் தொடர்பு நாளுக்கு நாள் இறுகிப் பிணைந்தது. வயதான மாசிலாமணிக்கு உதவிக்காக லதாவை அவர் வீட்டுக்கு அனுப்பிவிடுவார் அவர் தந்தை. லதாவின் உதவியும் மாசிலாமணிக்கு சில சமயங்களில் ரொம்ப அவசியமாகவே இருந்தது. ஒவ்வொருசமயம் சமையல் செய்துவிட்டுப்போவாள். ஆனால் பெருவாரியாக மாசிலாமணி லதாவிடம் வேலை வாங்க விரும்புவதேயில்லை. கூடுமான அளவுக்கு அவரே சமைப்பார். சிலசமயம் ஓட்டலுக்கும் போய்விடுவார்.

மாலை நேரம். நாலு மணிக்குமேல் லதா கண்டிப்பாகக் காபி போட்டுத் தருவாள். அவளுக்கு, மாசிலாமணிக்காக எந்த வேலையும் செய்ய வேண்டும் போலவே இருக்கும். ஒவ்வொரு சமயம் அவளுக்கு அவர் படும்பாடு ரொம்ப வருத்தமாக இருக்கும். வயதான காலத்தில் அவரே சமைப்பதும் மற்ற மற்ற வேலைகளைச் செய்வதும் லதாவுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

மாசிலாமணி தனக்காக எந்த வேலைக்குமே ஒரு வேலைக்காரனைப் போட்டுக்கொள்ள முடியும். ஆனால் ஏனோ அவர் அதைச் செய்யவில்லை. ஆள் போட்டால் சம்பளம் கொடுக்க வேண்டுமே என்ற எண்ண முடையவரல்ல. அவர் யார் யாருக்கோ உதவி செய்து கொண்டுதானிருக்கிறார். ஏதோ ஒரு அனாதைப் பிள்ளைகளின் பள்ளிக்குக்கூட மாதாமாதம் கொஞ்சம் பணம் கொடுக்கிறார்.

அவரைப் பற்றி லதாவுக்குப் புரியவேயில்லை. ஆனால் அவருக்கு அவளைப்பற்றி.........?

மனைவியின் புகைப் படத்தையே பார்த்துக் கொண்டிருந்த மாசிலாமணி, அந்த அறையை விட்டு வெளியே வந்து எழுதும் அறைக்குள் நுழைந்தார். ஏனோ அவருக்கு எழுத முடியவில்லை. குளிர்ந்த நீராய் இருந்த அவருடைய சிந்தனையில் கொதிநீர் கலந்தது போலிருந்தது. மனமெல்லாம், அங்கே பிறக்கின்ற நினைவெல்லாம் ஒரு தன்மையைத் தருகின்ற சூடாகவே இருந்தது. லேசாக இருந்த அந்தச் சூடு கடந்த இரண்டு வாரங்களில் பெருகத்துவங்கியது. சற்று நேரம் வெளியில் சென்று சுற்றிவிட்டு வர

வேண்டும் போலிருந்தது அவருக்கு.

கொஞ்சம் அழுக்காகக் காணப்பட்ட கட்டியிருந்த வேட்டியைக் களைந்துவிட்டு சலவை வேட்டியைக் கட்டிக்கொண்டு முழுக்கை சட்டையைப்போட்டுக் கொண்டு முகத்தில் எடுப்பாகக் கண்ணாடி அழகு செய்ய வீட்டைப் பூட்டிவிட்டுப் புறப்பட்டார். அவர் வெளியே கிளம்பினால் லதாவின்—வீட்டுக்குத்தான் போவது வழக்கம். ஆனால் ஏனோ அவருக்கு அங்கு போகத்தயக்கம்.

இரண்டு வாரங்களுக்கு முன்னால் அவர் லதாவின் வீட்டுக்குப் போயிருந்தார் அப்போது லதாவின் தந்தை லதாவையும் பக்கத்தில் வைத்துக்கொண்டே வேடிக்கையாகச் சொன்னார்.

"மாசிலாமணி சார் என் பெண் லதாவுக்கு ஒரு எழுத்தாளனைத்தான் கட்டிவைக்கணும்" என்றார். அதற்கு மாசிலாமணி சொன்னார்.

"லதாவுக்கு கலைகளின் மீது ரொம்ப மோகம். அதிலும் இலக்கியக்கலையில் ரொம்பரொம்ப அதிகம்" என்றார்.

"அது தப்புங்களா?"

லதாவின் கேள்வியில் விநயம்—ஊடாடியிருப்பதை மாசிலாமணி உணர்ந்தார். அதனால் 'தப்பில்லே' என்று சொன்னார். இதோடு அன்றையப் பேச்சுக்களெல்லாம் திசைமாறி வெவ்வேறு பேச்சுக்கிளம்பியது. அன்றைக்கு நடந்ததெல்லாம் இவ்வளவுதான். இதில் என்ன இருக்கிறது. அதில்தான் என்னென்னவோ இருப்பதாக மாசிலாமணிக்குப் பட்டது.

வெளியே கிளம்பிய அவர் லதாவின் வீட்டுக்குச் செல்லாமலே திரும்பினார். அதனால் அவருக்கு எந்த நிம்மதியும் இல்லை. அவளிடம் போய் சிறிதுநேரம் எதைப்பற்றியாவது பேசிவிட்டு வந்திருக்கலாம் என்று நினைத்தார்.

அவள் அவரிடம் வந்த சமயமெல்லாம் எவ்வளவு கலகலப்பாகப் பேசுகிறாள். ஏதோ ஒரு உரிமை பெற்றவளைப்போல அவரிடம் தனித்தன்மையுடன் நடந்துகொள்கிறாளே.

அதையெல்லாம் மாசிலாமணி அறியாதவரல்ல. அவளுடைய அழகு முகமும் உடல் கட்டின் வலுவும் அவளுக்கென்றே தெய்வம் தந்த தனிச் சொத்து.

தினமும் மாலை நேரமானால் நாலு மணிக்கு சிட்டாகப் பறந்து வருகின்ற லதா கடந்த நாலு நாளாக வரவில்லை. மாசிலாமணிக்கு எதுவும் தெரியவும் இல்லை. அப்படிப்பட்டவள் ஏன் வரவில்லை.

கதவைத் திறந்து வைத்துக்கொண்டு வாசலையே பார்த்தவண்ணமிருந்தார் மாசிலாமணி. மணி நாலைக் கடந்து...ஐந்தை முடித்து ஆறாயிற்று. லதா வரவேயில்லை.

அவராகவே சென்று ஸ்டவ்வைப் பற்றவைத்து காபி போடத்துவங்கினார். போட்ட காபியைக் குடித்தார். லதா போட்டுக் கொடுத்ததைப் போல ருசி இல்லை. காபியைக் குடித்துவிட்டு, விட்டுப்போன நாவலை தொட்டெழுதத் துவங்கினார்.

இரண்டுமணி நேரம் எழுதியிருப்பார். மணி எட்டுக்கு மேலாகிவிட்டது. உடம்பெல்லாம் வலிஏற்பட்டதனால் எழுதுவதை நிறுத்திவிட்டுப் படுக்கச் சென்றார். வயதாகி உடம்பு தளர்ந்துவிட்டதனால் அவரால் எட்டு மணிக்குமேல் எழுத முடியவில்லை. நல்ல வாலிபத்தில் இரவு பனிரெண்டு, ஒன்று என்று நேரம் போவதே தெரியாமல் எழுதியவர்தான் அவர். அவர் படுக்கையறைக்குப் போனதுமே—

யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்டது. உடனே மாசிலாமணி போய் கதவைத் திறந்தார். வெளியே ஒரு ஆள் நின்றிருந்தார். அவர் மாசிலாமணிக்குப் புதியவராகக் காணப்பட்டார்.

"நீங்க யாரு?" மாசிலாமணி கேட்டார்.

"உங்களைத்தான் பார்க்க வந்தேன், என் பெயர் நடேசன்" என்றார் வந்தவர்.

"உள்ளே வாங்க" மாசிலாமணி நடேசனை அழைத்துப் போனார். அவர் எழுதும் அறையில் இருவரும் உட்கார்ந்தனர்.

"என்னைப் பார்க்க வந்த நோக்கம்?" மாசிலாமணி அதிகாரமாகக் கேட்கவில்லை, அன்புகலந்த பணிவுடன்தான் கேட்டார்.

"நான் உங்களைப் பார்க்க வந்ததே ஒரு நல்ல காரியத்தை முன்னிட்டுத்தான்" என்றார் நடேசன்,

"விபரமாச் சொல்லுங்க" என்றார் மாசிலாமணி.

"நான் ஒரு கல்யாணத் தரகன். ஒரு பெண் விஷயமா உங்ககிட்டப் பேசவந்தேன்." என்று கொஞ்சம் தயக்கத்துடன்சொன்னார்நடேசன்.

"எங்கிட்டவா!" ஒரே வார்த்தையில் எத்தனையோ அர்த்தங்களை கொட்டிவிட்டார் மாசிலாமணி.

"ஆமா உங்ககிட்டத்தான்."

"எந்தப் பெண்ணைப்பற்றி?" எழுத்தாளர் கேட்டார்.

"ஓவியர் மகள் லதாவைப்பற்றி!"

நடேசன் இதைச் சொன்னதுமே மாசிலாமணி வாய்விட்டுச் சிரித்துவிட்டுச் சொன்னார்.

"ஓ!...லதாவைப்பற்றியா! ரொம்ப தங்கமான.........அடக்கமான பெண்ணு."

"அதுதான் எனக்கே தெரியுமே" என்றார் நடேசன்.

"பிறகென்ன வேணும் உங்களுக்கு. ஒருத்தனுக்கு வாழ்க்கைப் படப்போற பெண்ணுக்கு இதைத் தவிர வேறு என்ன வேணும்" மாசிலாமணி கொஞ்சம் கோபமாகவே பேசினார்.

"நான் லதாவைப்பற்றி அறிந்து கொள்ள வரவில்லை. அவள் மாப்பிள்ளையைப்பற்றிச் சொல்ல வந்தேன்".

"சொல்லுங்களே...என்ன தயக்கம். மாப்பிள்ளை என்ன வேலை செய்யறாரு, லதாவுக்கு ஏற்ற பொருத்தம் இருக்கா?" பெற்ற தகப்பனைவிட மாசிலாமணி அக்கறையுடன் கேட்டார்.

ஏனோ நடேசன் சிறிது மௌனமாக இருந்தார். அது மௌனமா அல்லது தயக்கத்தின் குறிப்பா சில பல விநாடிகளுக்குப் பிறகு நடேசன் சொன்னார்.

"லதாவுக்கு எழுத்தாளர்தான் வேணுமாம்."

"மகிழ்ச்சி...ஒரு நல்ல எழுத்தாளரைப் பார்த்து லதாவுக்குத் திருமணம் செய்வோம்" என்றார் மாசிலாமணி.

"லதாவுக்கு உங்களைத்தான் பிடிச்சிருக்காம்!" சொல்லிவிட்டார்.

நடேசன் துணிந்து சொல்லிவிட்டார். எப்படிச் சொல்வது என்ற தயக்கத்துடன் வந்த அவர் எப்படியோ, வந்த நோக்கத்தை வெளியிட்டுவிட்டார். எதிர்பாராமல் வழுக்குப் பாறையில் கால் வைத்துவிட்டதைப்போல பெரும் திகைப்படைந்தார் மாசிலாமணி. சற்று நேரத்துக்கு முன்பு வாய்விட்டுச் சிரித்த சிரிப்பும் அவர் முகத்தில் இருந்த களையும் எங்கோ போய் மறைந்தது.

"என்ன சொல்றீங்க?" எழுத்

தாளர் கேட்டார், அவருடைய கேள்வியில்தான் எவ்வளவு பயம் வெளிப்பட்டது. எந்தப் பிரச்னை வெளிவந்துவிடக் கூடாது என்பதற்காக கடந்த இரண்டு வாரமாக ஓயாமல் சிந்தித்தது, அதனுல் இதயமெல்லாம் சூடாகிக் குழம்பியிருந்தாரோ அது வந்தே வந்துவிட்டது வெளியில்.

லதா, மாசிலாமணியிடம் நடந்து கொண்ட முறையானது அவருக்கே விளங்காத ஒருவித கவலையைத் தந்துவந்தது. அந்தக் கவலைக்கும் ஒரு பொருள் உண்டாகிவிட்டதே!

நடேசன் சொன்னுர். 'உங்க மேலே லதாவுக்கு உயிர்; அவளுக்குக் கடந்த இரண்டு வருஷமா திருமண ஏற்பாடு செய்யறேன் நான். அந்த ஏற்பாடு இதுவரை தோல்விதான். சாடை மாடையாக லதா சொல்லிவிட்டாள். வாழ்ந்தா உங்களோடுதானும்...'' நடேசன் சொல்லச் சொல்ல மாசிலாமணி குறுக்கிட்டார்,

''ஐயா...எனக்குப் பேச்சுக்கூட வரமாட்டேன் என்கிறது. லதா என்மீது வைத்துள்ள அன்புக்கு நன்றி. நான் எதை யெதையோ பெற்றிருக்கிறேன். ஆனுல் இழந்து போன என் இளமையை மீண்டும் பெற முடியாதவனுக இருக்கிறேன். இளமையை, முதுமையா ஆளுவது? வேண்டாம் ... ஒருபோதும் வேண்டாம்...'' மாசிலாமணியால் பேச முடியாமல் பேச்சு நின்றது.

''நீங்க சொல்றதைவிட ஆயிரம் மடங்கு நானும் லதாவின் அப்பாவும் அவளுக்குச்சொல்லி முடிந்தது. அதனுல் வந்த பலனே தோல்விதான், லதாவின் அப்பாவும் முடிவுக்கு வந்துவிட்டார். உங்களுக்கே தன் மகளைக் கொடுப்பதற்கு.'' நடேசன் நிலைமையை அப்படியே சொன்னா.

மாசிலாமணி எழுந்து படுக்கை அறைக்குப் போனுர். அங்கேயுள்ள தன் மனைவியின் புகைப்படத்தைப் பார்த்து அருவியாக நீர் கொட்டினர்.

அவர் எவ்வளவு பெரிய மனிதர். அவருடைய உள்ளத்தில் தான் எத்தனை யெத்தனை அறிவுக் கதிர் மணிகள் விளைந்திருக்க வேண்டும். அப்படிப்பட்டவரே அழுகிருர் என்ருல் அன்புக்குத்தான் எவ்வளவு வலிமை. என்ரே காலமாகிவிட்ட மனைவியை எண்ணி இன்றும் அழுகிருர் வேதனையுடன். தன்னை மறந்து அழுது கொண்டிருந்தவர். கண்களைத் துடைத்துக்கொண்டு மீண்டும் நடேசனிடம் வந்து உட்கார்ந்தார். சிறிதுநேரம் இருவரும் அமைதியில் இருந்தனர். பிறகு மாசிலாமணியே பேசினுர்.

''ஐயா...என்னை மன்னிக்கணும். லதாவின் அப்பா கிட்ட விளக்கமா சொல்லுங்க. இந்தத் திருமணம் முறையானதல்ல. லதாவுக்கு நான் கணவனுக முடியாது இது திட்டவட்டமான முடிவு.'' எழுத்தாளர் தன் மனதிலுள்ளதைச் சொல்லிவிட்டார். நடேசனும் எழுந்து போய்விட்டார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு எழுத்தாளரின் வீடு பூட்டிக் கிடந்தது.

மனைவியின் பிரிவால் மலைநாடு வந்த மாசிலாமணி மற்ருெருத்தியின் தொடர்பால் அந்த மலைநாட்டையும் விட்டுப் போய்விட்டார்!

★


சமூக அமைப்பு மாற்றப்படவேண்டுமென்பதற்கான போராட்டங்கள் புதுப்புது வடிவ மெடுக்கின்றன!

தனி மனிதர்கள்கூட சமூகத்தின் ஆணிவேரையே அறுத்துவிட முடியும் என்று முன்வருகிருர்கள்—

யார் அவர்கள்?

தத்துவமேதை

T. K. சீனிவாசன், M. P.

அவர்கள் படைக்கும்

புதிய தொடர்கதையில் படிக்கப் போகிறீர்கள்!

12—7—70 முதல்

''காஞ்சி''யில் எதிர்பாருங்கள்.


6-ம் பக்கத் தொடர்ச்சி

மலர்புரி அரசி, முடிதுறக்க இசைவார்; மக்கள் வீரமணியை மன்னராகத்தேர்ந்தெடுப்பார். ஆரியத்துக்கு அடிபணிந்ததற்குக் கழுவாய்த்தேடிட அரசி, தன் பதவியைத் துறந்தது முறையே என்று சோழனும், பாண்டியனும் கூறுவர். இதுதான் என் திட்டம் என்ருன். "போர் மூண்டுவிட்டால், வீணுகப் பலர் மடியவேண்டுமே" என்று கவலைப்பட, அரசியாருக்குப் பாண்டியன் "அந்தப் பயமே வேண்டாம்" என்று கூறித்தேற்றினுன். மலர்புரி அரசியிடம்விடை பெற்றுக்கொண்டு சோழநாடு சென்று பாண்டியன் திரும்பு முன்னர் மலர்புரி அரசி மந்திரிப் பிரதானியிடமும், ஊர்ப்பெரியவர்களிடமும், "ஆரியத்துக்கு அடிமைப்பட்டுக் கிடந்த நான், இனியும் நாடாளுவது முறையாகாது. வேறு தகுதியானவரை

(தொடரும்)

## மிஸ்டர் அப்போலோ:

# இரத்த ஆறு ஓடுமோ?

—சீயேயெம்—

அரசியலில் கணிக்கப்படுகின்ற அனைத்து கணிப்புக்களும், அப்படி அப்படியே நடைபெற்றுவிடும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. சிலபல காரணகாரியங்களை முன்நிறுத்தி, இதனால், இது நிகழக்கூடும் என்று கூறப்படுவது உண்டு. கூறப்பட்டவை, பல சந்தர்ப்பங்களில் கூறப்பட்டவையாக நின்றுவிடும் என்பதெல்லாம் நன்குணர்ந்தவர்தான் மிஸ்டர் அப்போலோ. இலங்கைத் தேர்தலின் முடிவுக்குப் பின்னர், மிஸ்டர் அப்போலோவே மூர்ச்சித்து விழக்கூடிய நிலைமைகள் வேகவேகமாகப் பிறந்ததை யடுத்து, முதல் காரியமாக, முதல்வர் பதவியைப் பறிகொடுத்த டட்லி சேனநாயகாவைப் பார்த்துவிடுவது என்று புறப்பட்டார்.

'சட்டி சுட்டதடா கைவிட்டதடா'' என்ற இசைத்தட்டினை வைத்து ரசித்துக் கொண்டிருந்தார் டட்லி. மிகவும் கவலையில் மூழ்கிக் கிடப்பார் என்ற அப்போலோவின் கணிப்பு முதலிலேயே தவறுகிவிட்டது. தனக்குத்தானே ஏற்பட்ட திகைப்போடு, டட்லியின் முன் சென்று கை தூக்கி, ஆங்கிலேய முறையில் வணக்கம் செலுத்தினார். வினாக்குறியை பார்வையில் தேக்கி நிறுத்திய டட்லியைப்பார்த்து 'நான் ஒரு பிரஸ் ரிபோர்ட்டர்; அப்போலோன்னு பேரு'' என்றார்.

'ரிசல்ட் தெரிஞ்ச பத்துப் பதினைந்து நிமிஷத்துக்கெல்லாம் நான் ராஜினாமாச் செய்திட்டேனே'' என்றார் டட்லி. ''அதைப் பாராட்டிப் போகத்தான் வந்தேன்; நீங்க எந்த பைலையும் கொளுத்திவிடும்படி உத்திரவுபோட்டலேன்னு தெரிந்ததும், உங்களைப் பற்றிய என் மதிப்பு ஒசந்துப் போச்சுது'' என்றார் நிருபர். புன்சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு, டட்லி, ''நான் அவ்வளவு கீழ்த்தரமாக இந்த நாட்டு அரசியலை நடத்தலியே!'' என்றார். ''அப்போ நீங்க தோற்றிருக்கவேண்டிய அவசியமே இல்லையே!'' என்றார் நிருபர். கேள்வியும் பதிலும் தொடர்ந்தன.

''தேர்தல்லே தோற்கிறதும், ஜெயிக்கிறதும் சகஜம் தானே. ஒருவருடைய சாதனைகளோ, அல்லது எதிரானவைகளையோ மட்டும்தான் இந்த வெற்றித் தோல்வியை நிர்ணயிக்கும்னா, திருமதி ராட் வாட்டே ஜெயித்திருக்கமுடியாதே!''

''உங்க ஆட்சிக்காலம் முழுசா ஐந்தாண்டுகளும் முடிஞ்சிருக்கு. இந்தக் காலத்திலோ, கூடிய மட்டும் இனக் கலவரம் இல்லாமே நீங்க கவனித்துக்கிட்டிருந்திருக்கீங்க. இருந்தும், இந்த தேர்தல்லே அந்த இனவெறிதானே முதல் இடம் பிடிச்சி இருந்தது! அதுக்குத் தனிக் காரணம் ஏதாவது உண்டா?''

''காரணமாவது ஒண்ணாவது இன உணர்ச்சிங்கிறது ஒரு பஞ்சு! தூண்டுதல்கிற நெருப்புப் பொறி பட்டால்கூட உடனே தீப் பிடித்துக்கொள்ளுமே!''

''நாட்டினுடைய சுய தேவைப் பூர்த்திக்காக நீங்க எதுவும் செய்யலீயா?''

''அப்படிச் சொல்ல முடியாது. கடந்த ஐந்தாண்டுக் காலமும் என்னைக் கவிழ்த்துவிட பல சந்தர்ப்பங்களை உண்டாக்கினாங்க! இராணுவ ஆட்சி வரும்ன்னு கூட பீதியைக் கிளப்பினாங்க, நிலைமையும் கொஞ்சம் மாறித்தான் இருந்தது. இருந்தாலும் தொழில் நிலைமையிலேயும், பொருளாதார நிலைமையிலேயேயும், ஒரு ஸ்திரத் தன்மையை உண்டாக்கி இருக்கேன், பெரும்பாலும் உள்நாட்டுத் தயாரிப்புக்களுக்கும், உற்பத்திக்கும் முதலிடம் இருக்க வேணுங்கிற எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கேன்!''

''அரிசிப் பற்றுக்குறைதான் முக்கிய காரணமா, உங்கக் கட்சித் தோல்விக்கு?''

''அப்படி யாரும் சொல்ல முடியாது! ரெண்டுபடி அரிசி வாரத்துக்குத் தருவதாகச் சொன்னாங்க அவுங்க! தரட்டுமே, நான் தடுத்திடப்போறேனா?

''நீங்க தமிழ் மக்களோட முழு நம்பிக்கையும் கிடைக்கிற மாதிரி, நடந்துக்கலேன்னு ஒரு குற்றச்சாட்டு இருக்கே...''

''தப்புப் பிரசாரம் அது! நான் தமிழ் மக்களுக்கு அதிக வாய்ப்பு வசதிகளைச் செய்துட்டதாகத்தான் இப்ப ஆளவந்திருக்கிறவுங்க பிரசாரம் செய்தாங்க! சிங்கள நாட்டுக்கு நான் எதிரின்னு கூட பேசினாங்களே!''

'அப்போ நீங்க யாருக்கு எதிரி'

''ஏன், யாருக்காவது எதிரியா இருந்தாத்தான், அரசியலே இருக்க முடியுமா?''

''அரசியல் அரிச்சுவடியே அப்படித்தானே இருக்குது...''

''அப்போ எனக்கு அந்த அரசியல் வேண்டாமே!''

''அதுதான் ஜனங்களாப் பார்த்துச் சொல்லிட்டாங்களே!

''நான் ஜெயிச்சு வந்துட்டேன் தெரியுமில்லியோ?''

'மிஸ்டர் அப்போலோ' பகுதியில் காணப்படும் கருத்துக்கள் எவரையும் புண்படுத்தும் நோக்கத்தோடு, அல்லது குறை காணும் நோக்கத்தோடு, தரப்படுவன அல்ல! இப்படியும் சில கருத்துக்களைப் பெற முடியும் என்பது தான்!

"இரண்டாவது, எண்ணிக்கையிலேதானே! அதுவும் ஆயிரத்துக்குக் கொஞ்சம் அதிகம் ஓட்டு வாங்கி!

"ஒரு ஓட்டு மெஜாரிட்டின்னாலும் அது வெற்றிதானேய்யா!"

"வெற்றிதான்! இருந்தாலும் மதிக்க முடியாத வெற்றி அது! பேசாமே ராஜினுமாச் செய்துடுங்களேன்!"

"எதுக்கு அப்படிச் செய்யணும் பார்லிமெண்டிலே என் எதுக்க உட்கார்ந்துக்கிட்டு, ராட்வாடே விழி உருட்டுறீங்களே. அது போல இப்ப நான் உருட்டிட்டுப் போறேன்! நிறைய வாக்குறுதிகள் கொடுத்திருக்காங்க! நிறைவேற்றுங்க, நிறைவேற்றுங்கன்னு கேட்டுக்கிட்டே இருக்கலாமே!"

பேட்டியில் சுவரஸ்யம் இல்லை என்று ஒருவாறு அப்போலோவுக்குப்பட்டது. "அப்ப நீங்க அதையே செய்துக்கிட்டிருங்க, அடுத்த அஞ்சு வருஷத்துக்கு" என்று கூறிவிட்டுப் பறந்தார் மிஸ்டர் அப்போலோ. அடுத்தபடியாக ராட்வாடே என்னும் பண்டாரநாயகாவின் முன் வந்து குதித்தார்.

"உங்க கணவரின் சமாதிக்கு மலர்வளையம் வச்சிங்களா?" என்ற கேள்வியுடன் எதிர் நின்றார். கேள்வியின் தோரணையே அவர் ஒரு செய்தியாளர் என்பதைத், தன் முன்னைய அனுபவங்கள் எடுத்துக்காட்ட, "அந்தப் பழக்கமெல்லாம் எனக்குக் கிடையாது; நான் புத்தமதத்திலே இருக்கிறேன் தெரியுமில்லே?" என்றார்.

"போதி மரத்தடியிலே ஞான தீட்சைப் பெற்றாராம் புத்தர்! ஜீவஹிம்சை செய்யக் கூடாதுங்கிறது அவரது பிரதான கொள்கையாம்! உயிரெல்லாம் ஒரே தன்மை கொண்டிருக்கிறதினாலே, எந்த உயிரும், எந்த உயிருக்கும் உயர்ந்ததோ, தாழ்ந்ததோ இல்லைன்னு ஆகுதில்லையா?" என்றார் அப்போலோ.

"நிச்சயமா அப்படித்தான்! சத்தியம் தவறக் கூடாதுன்னு கூட அவர் சொல்லி இருக்கிறாரே!"

"ஆமாம். சத்தியத்தையும், உண்மையையும், அகிம்சையையும் புத்தமதத்துக்கு மும்மணியாகக்கொடுத்திருக்கிறாரே! புத்தம் சரணம்! சங்கம் சரணம்! தருமம் சரணம்! ங்கிற மூலமந்திரமே அதைத்தானே எடுத்துச் சொல்லுது!"

"கரெக்ட்! இப்போ இதிலே உங்களுக்கென்ன சந்தேகம் வந்துது?"

"அந்த மும்மணி மேலேயோ, இந்த அம்மணி மேலேயோ சந்தேகம் எதுவுமில்லே."

"அப்போ..."

"சாபம் கொடுத்திடாதீங்க! நீங்க சில வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிங்களே அதைப் பற்றி..."

"சந்தேகமா? இதோ பாருங்க! அன்னைக்கு இந்தியாவிலே பிரதமரா இருந்த லால்பகதூர் கிட்டெ ஒரு வாக்குறுதி கொடுத்தேன்; ஒப்பந்தமும் செய்துக்கிட்டேன்! ஐந்து லட்சம் தமிழரை, இலங்கையிலிருந்து வெளியேத்துறதா! ...டட்லி, அதை முழுசாச் செய்யலே! பாருங்க, என் முதல் வேலையா அதைச் செய்து முடிக்கிறேன்!"

"இதைத்தான் முதல்லே செய்வீங்கன்னு நான் நினைச்சேன்! ஆனா ரெண்டு படி அரிசி விஷயமா என்ன நடவடிக்கை எடுத்திருக்கீங்க?"

"அதிகாரிகளைக் கலந்து பேச வேண்டாமோ? அவகாசம் வேணுமே"

"பாங்குகளை நாட்டுடைமையாக்குவது எப்போ?"

"இனிமேத்தான் செய்யணும்; நாலு பேங்க் பிரிட்டிஷாருக்குச் சொந்தம்; ரெண்டு இந்தியாவுக்கு...பாக்கி..."

"இருங்கோ! நட்டஈடு கொடுத்துட்டா? கொடுக்காமலேயா?"

"அதெல்லாம் யோசிக்கணும்; புள்ளி விவரம் திரட்டணும்?"

"அப்போ யோசிக்காமே கொடுத்த வாக்குறுதி இது. இருக்கட்டும். தமிழ்க் குடி மக்களைப் பத்தி ஏதாவது திட்டம் வச்சிருக்கீங்களா?"

"என் திட்டம்தான் பிரபலமானதாச்சே! முதல்லே அரசாங்க மட்டத்திலே எல்லாம் சிங்களம்! சிங்களவர்! அப்புறந்தான் அடுத்ததெல்லாம்!"

"இப்பக்கூட அப்படித்தானே இருக்கு"

"இருக்கு, இருந்தாலும் வேகம் போறலே,"

"உங்க இலங்கை இராணுவத்திலே இருக்கிற மொத்தத் தொகையை விட், இங்கே இருக்கிற தமிழருங்க அதிகம் இல்லியா?"

"அதுக்காகத்தானே வெளியேற்றும் திட்டமே கொண்டு வந்தது!"

"நான் தப்பா நெனைச்சுட்டேன் உங்களுக்கும் தி. மு. க.-வுக்கும் ஜென்மப் பகை! தி. மு. க.-வை ஒழிக்கத்தான் இப்படி ஏதாவது திட்டம் தீட்டி இருப்பீங்களோன்னு ஒரு சந்தேகம், ஏன்னா, தமிழ் நாட்டிலே தி. மு. க. ஆட்சிக்கு வந்ததுக்குப் பிறகு, அது இலங்கைமீது படை எடுக்கும்னு, நேரங் கிடைச்சப்போ எல்லாம் பேசி இருக்கீங்க. அதுக்கு இப்ப நீங்க புத்துயிர் கொடுக்காமலா இருப்பீங்க?!"

"இதோ பாருங்க மிஸ்டர் ரிப்போர்ட்டர்! நீங்க இப்படியெல்லாம் ஒரு விஷயத்தை ரிவ்யூ பண்ணப்படாது. அரசியல் காரணங்களுக்காக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலே ஒவ்வொரு விஷயத்தை சூடா, சுவையா சொல்ல வேண்டியததான் இருக்கு; ஏதாவது ஒரு அர்த்தத்தை நாம நினைச்சுக்கிட்டு பேசுறோம், மற்றவுங்க அதை வேற மாதிரியா 'ரிவ்யூ' பண்ணிடறாங்க! அப்படித்தான் தி. மு. க. விஷயமும்."

"அப்போ, இனிமே தி. மு. க.-வைப் பற்றி எதுவும் பேசமாட்டீங்கன்னு சொல்லுங்க."

"அதெப்படிச் சொல்ல முடியும்? சந்தர்ப்பங்கள் எப்படியெல்லாமோ மாறலாமே"

"மாறலாம், மாறலாம்! அப்படி மாறும்போது இங்கே அடிக்கடி இரத்த ஆறு ஓடும்! கொலை, பலாத்காரம், கற்பழிப்பு, கொள்ளைங்க மலியும்! அப்படித்தானே?"

"ஏன் அப்படிச் சொல்லணும்?"

"ஒரு வார்த்தைக்குச் சொன்னேன்! ஏன்னா, இந்த நாட்டுக்குச் சொந்தக்காரவுங்க நீங்கதான்னு பேசுறீங்க! நாட்டை நாடா ஆக்கித் தந்தது நாங்கதான்னு அவுங்க பேசுறாங்க! வலுத்தவன், இளைத்தவனை வலுச் சண்டைக்கு அழைச்சா, அப்புறம் நிலைமை, இரத்தப் பசிதானே?"

"அதுக்கெல்லாம் இடம் கொடுக்க மாட்டேன்."

"கொடுக்கப்படாதுன்னுதான் கேட்டுக்கிறேன், நான் வரட்டுங்களா?"

என்று நகர்ந்தார் அப்போலோ,

(15-ம் பக்கம் பார்க்க)

# புற்றுநோயைக் குணப்படுத்த முடியும்

—டாக்டர் பி. கே. துரைசாமி

புற்றுநோய் மிகப் பழமையான நோய். நாகரிகம் தோன்றியது முதலே அதுவும் இருந்து வருகிறது. ஆனால் மேல் நடக்கும் ஒரு நிகழ்ச்சியைப்போல் அது புதுமை வாய்ந்ததும் ஆகும். இந்த விசித்திரமான முரண்பட்ட நிலைதான் இந்த வியாதி விஷயத்தில் காணப்படுகிற நிலைமை.

புற்றுநோய் தேசம், ஜாதி, மதம், இனம், வயது அல்லது ஆண் பெண் வேற்றுமை எதையுமே பொருட்படுத்தாத ஒரு நோயாகும். நவீன சமுகங்களில் பலி வாங்குகிற உயிர்களின் எண்ணிக்கையில் அது கொஞ்சங்கூட இரக்கமே காட்டாது, இந்த நோய் திடீரென—யதேச்சையாக ஆணுக்கும். பெண்ணுக்கும், புண்ணியவானுக்கும், பாவிக்கும். மன்னனுக்கும், காசில்லாத வறியவனுக்கும், நகரவாசிக்கும், கிராமவாசிக்கும் வித்தியாசமின்றி வந்து விடுகிறது. இந்த வியாதி உடலில் எந்த பாகத்தில் ஏற்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் தேசிய இனங்கள், நாட்டு மக்கள் வேறுபாடு, மதவேறுபாடு சமூக — பொருளாதார வகுப்புகள் வேறுபாடு முதலியவை தெரிய வருகின்றன.

சமீப காலத்தில் புற்றுநோயானது இடைவிடாமல் அதிகரித்துக் கொண்டே வருகிறது. மற்ற வியாதிகளைக் கட்டுப்படுத்த வழி கண்டபின் இந்தப் புற்றுநோய் ஒரு அபாயகரமான தீவிர பிரச்சினையாகி இருக்கின்றது. இந்த நூற்றாண்டில் அது காவுகொண்ட மனித உயிர்களின எண்ணிக்கையை, இனம் தெரியாத அளவிலிருந்து பிரமிக்கவைக்கும் பேர் எண்ணிக்கை வரை துரிதமாகப் பெருகிவிட்டது. நவீன கால நாடுகளில் இருதயநோய், இரத்த நாள வியாதிகள் ஆகியவைகளுக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய வியாதியாக இருக்கிறது. உலகம் முழுவதிலும் ஆண்டுதோறும் 20 லட்சம் பேருக்கு மேல் இதனால் மடிகிறார்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்தில் சுமார் 50 லட்சம் பேர் இவ் வியாதி உள்ளவர்களாய் இருக்கிறார்கள். அதைப் போல் நாலைந்து மடங்குப்பேர் புற்றுநோய் காண்பதற்கு பூர்வீகச் சூழ்நிலையில் உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். ஆனால் இவர்கள் எல்லோருக்குமே புற்றுநோய் வந்துதான் தீர வேண்டும் என்பதில்லை,

## இந்தியாவில்

இந்தியாவில் புற்றுநோய்ப் பிரச்சினையின் அளவு பிரம்மாண்டமானதுதான், சென்ற 20 வருஷ காலத்தில் புற்றுநோய் கண்டவர்களின் எண்ணிக்கை வரவர அதிக அளவிலேயே இருந்திருக்கிறது. அதாவது வாழ்நாள் காலம் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிற சந்தர்ப்பத்தில் இவ்வாறு ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் அவ்வளவு பேருக்கு மேலும் மேலும் இந்த வியாதியைப் பற்றி முன்னிலும் அதிகமான அளவுக்கு நல்ல அறிவு விளக்கம் ஏற்பட்டிருப்பதால், சிகிச்சை வசதிகள் மக்களுக்கு முன்னிலும் அதிகமாய்க் கிடைத்து வருவதால் இந்த வியாதியைப் பற்றிப் பொது மக்களிடையே முன்னிலும் அதிக விழிப்பு உணர்ச்சி இருப்பதால், நோய் கண்டவுடன் அதிகாரிகளுக்கு அறிவிக்கிற எண்ணிக்கை அதிகரிப்பதால், முன் காலத்தைவிட இப்போது சீக்கிரமாகவே புற்றுநோய் கண்டிருப்பது தெரிந்து கொள்ளப்பட்டு சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. இப்போது ஒவ்வொரு வருஷமும் ஒரு லட்சம் ஜனத்தொகையில் புதிதாக 85 பேருக்குப் புற்றுநோய் ஏற்படுகிறது என்று டாக்டர் ஜே. சி. பேமாஸ்டர் (பம்பாய் டாட்டா ஞாபகார்த்த ஆஸ்பத்திரி இயக்குனர்) கண்டறிந்திருக்கிறார். ஒவ்வொரு வருஷமும் இரண்டு லட்சம் பேர் இந்த வியாதியால் இறக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

## நோய் விவரம்

புற்றுநோயானது. அடிப்படையில் முதிய வயது பகுதியினரைப் பாதிக்கிற வியாதியாகும். பிரதானமாய் 45 வயதிற்கு மேற்பட்டவர்களை அது பாதிக்கும். இளம் வயதுப் பிரிவினரையும் குழந்தைகளையும், அது சொற்பமாகவே தாக்கும். குழந்தை மரண விகிதம் குறைந்துவிட்டிருப்பதாலும் உயிர்ப்பலி வாங்குகிற பிரதான வியாதிகளான மலேரியா, வைசூரி, க்ஷயரோகம் முதலியவை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டோ ஒழிக்கப்பட்டோ உள்ளபடியாலும் நம் நாட்டில் மக்களின் ஆயுட் காலம் அதிகரித்துவிட்டிருக்கிறது. இப்போதைய சராசரிபடி அது 53 வயதாக இருக்கிறது. எனவே முன்னிலும் அதிக எண்ணிக்கை உள்ளவர்கள் முதிய வயதுள்ளவர்களாக இருக்கும் பிரிவில் ஜீவந்தர்களாக இருப்பார்கள், ஆகையால் புற்றுநோய் எதிர்காலத்தில் பிரதான சுகாதாரப் பிரச்சினையாக இருக்கும். ஏனென்றால் எதிர் காலத்தில் மக்கள் உயிரோடு இருக்கும் காலம் இன்னும் அதிகம் ஆகலாம்.

புற்றுநோய் என்கிற வார்த்தை பலவிதமான கட்டிகளைக் குறிப்பிட உபயோகிக்கப்படுகிறது. அந்தக் கட்டிகள் (புதிய கண்ணறைகள் வளர்ச்சி) பலவிதமான பாதகமான நிலைமைகளை உண்டுபண்ணுகிறது. இறுதியில் சாவையும் உண்டுபண்ணுகிறது. வேறு வகையில் சொல்வதானால் உடம்பில் அசாதாரணமான முறையில் தசைகள் உண்டானால் அவைகளைக் கட்டிகள் என்று சொல்வார்கள், இந்தக் கட்டிகள் இருவகைகளாகப் பிரிக்கப்படும். அந்தந்த ஸ்தலத்திலேயே வீக்கத்தை உண்டுபண்ணி உயிருக்கு மோசம் பண்ணாமல் இருக்கிற வகை சாதாரணக் கட்டியாகும். இடைவிடாமல் வளர்ந்து கொண்டே வந்து பரவி வியாபித்து மரணத்தை உண்டுபண்ணுகிற கட்டியை உக்ர கட்டி (மாலிக்னென்ட் ட்யூமர்) என்று சொல்வார்கள். இந்த இரண்டாவது வகைதான் புற்றுநோய்.

## ஏழு அபாய அறிகுறிகள்

புற்றுநோய் ஆரம்பிப்பதுவெளியே தெரியாதபடியே உண்டாகும்.

மக்களைப் பாதிக்கிற நோய்களில் புற்றுநோய் ஏராளமான உயிர்களைப் பலிவாங்குகிற நோயாகிவிட்டது, இதுபற்றித் தப்பபிப்பிராயங்கள் சில ஏற்பட்டுள்ளன. அது குணப்படுத்த முடியாததென்று ஓர் எண்ணம் நிலவுகிறது. அது தவறு என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

அஜாக்கிரதையாய் இருப்பவர்கள் ஆரம்பக்கட்டத்தில் அதைக் கண்டு கொள்ளாமலே இருப்பார்கள். ஆனால் அனுபவத்திலிருந்து தெரிய வருகிறது என்னவென்றால் உடம்பில் ஒரு பகுதியில் புற்றுநோய் தோன்றும்போது பின்வரும் எச்சரிக்கை அறிகுறிகளும் கூடவே தோன்றும் என்பதுதான்; எந்த உறுப்பில் காண்கிறது என்பதைப் பொறுத்து அவை தோன்றும்.

1) ஆருத புண்—வாய்ப் பகுதியில் (முக்கியமாக.)
2) அசாதாரணமான முறையிலும் அடிக்கடியும் ஏற்படுகிற ரத்தப் போக்கு—முக்கியமாக விலக்கம் நின்றுவிட்ட பெண்களுக்கு.
3) உடலில் ஏதாவது ஒரு பாகத்தில் திடித்த சதை அல்லது கட்டி ஏற்படுவது—முக்கியமாக பெண்களின் மார்பில்.
4) தொடர்ந்தாற்போல் அஜீரணம் இருப்பது அல்லது விழுங்குவதில் கஷ்டம் இருப்பது.
5) இடைவிடாத தொண்டை வறட்சி அல்லது இருமல்.
6) வழக்கமான குடல் இயக்கத்தில் மாறுதல் ஏற்படுவது.
7) மச்சம் அல்லது பால் உண்ணியின் அளவும், நிறமும் மாறுவது.

இந்த ஏழு அபாய அறிகுறிகளும் காணப்பட்டால் நிச்சயமாய் புற்றுநோய் ஏற்பட்டிருக்கிறது என்று அர்த்தமல்ல, இவைகளில் எவையாவது நீடித்து கொஞ்ச காலத்திற்கு இருந்து வந்தால் ஒரு டாக்டரிடம் காட்டி புற்றுநோய் இருக்கிறதா இல்லையா என்பதை உறுதியாய்த் தெரிந்துகொள்வது நல்லது.

ஊறு செய்யும் கட்டி அக்கம் பக்கத்திலுள்ள தசைகளை நேரடியாகப் பாதிக்கிறது என்பதோடுகூட அது முதலில் கண்ட ஸ்தலத்தை விட்டு விலகி உடல் உள்ளே புகுந்து புதியதொரு இடத்தில் தலைகாட்டும். ஆரம்பத்திலேயே வியாதி கண்டிருப்பதை அறிந்து விட்டால் புற்றுநோய் முதலில் கண்ட ஸ்தலத்திலேயே இருக்கும்படிச் செய்துவிடலாம். இன்னும் நல்ல வெற்றிகரமாகவும் சிகிச்சை செய்யலாம். ஆனால் கட்டி இடம் விட்டு இடம் மாறும்படி அனுமதித்து விட்டால் அது உடலில் வெகு தூரத்திலுள்ள இடங்களுக்கும் பரவிவிடும். பிறகு குணப்படுத்துவது மிகவும் கஷ்டம்.

புற்றுநோயில் சில ரகங்கள் பற்றி நமக்குப் போதுமான அறிவு விளக்கம் கிடைத்திருக்கிறது. எனவே அவைகளைத் தடுக்கவும் முடியும். நுரையீரல் புற்றுநோய் இதற்கு உதாரணம். இந்த ரகம் சிகரெட் பிடிப்பவர்களிடையே சகஜமாய்க் காணப்படுகிறது. தொழிலாளர்களைப் பாதிக்கிற சிலரகப் புற்றுநோய்கள் ரசாயனங்கள் வேறு பல தொழில்துறை அபாயங்கள் ஆகியவைகளால் ஏற்படுகின்றன. ஆனால் வேறு பல புற்றுநோய் ரகங்களைத் தடுக்கக்கூடிய நிலை நமக்கு இன்னும் ஏற்படவில்லை, சிறந்த முறையில் நாம் செய்யக்கூடிய வைத்தியம் எவ்வளவு ஆரம்பக்கட்டத்திலேயே தொடங்க முடியுமோ அவ்வாறு தொடங்கி, எவ்வளவு தூரம் பரிபூரணமாக சிகிச்சை அளிக்க முடியுமோ அவ்வாறு செய்வதுதான். புற்றுநோயைக் கண்டறிந்து சிகிச்சை செய்வதில் அபார முன்னேற்றம ஏற்பட்டிருக்கிறது. நவீன அறுவைச் சிகிச்சை, மருந்துகள், எக்ஸ்ரே, பிற கதிர்வீச்சுகள் ஆகியவைகள் எல்லாம் புற்றுநோய்

---

13-ம் பக்கத் தொடர்ச்சி

வான சஞ்சாரத்தின்போதே அடுத்த பேட்டி யாருடன் என்பது தீர்மானமானவுடன், திருமலைப பிள்ளைத் தெருவில் வந்து நின்றார்.

திருவண்ணாமலை போய் வந்த களைப்பில், சோபாவில் சாய்ந்துகொண்டு, கண்களை மூடியும், மூடாமலும் அமர்ந்திருந்தார். அப்போலோ வந்த அதிர்ச்சியில், கண்களைத் திறந்தார் அசல. மூடிக்கொண்டுவிட வேண்டும் என்று நினைத்துச் செயல்படுவதற்குள் நிருபர் அவரைப் பார்த்துவிட்டு 'வணக்கம், தலைவரைய்யா' என்றார். விடாக்கண்டரான அப்போலோவிடம் சிக்கிவிடக் கூடாதென்றாலும், விட்டால்தானே!

“வணக்கம், வணக்கம்! எங்கே வந்தே இவ்வளவு வேகமா?”—என்றார் காமராசர்.

“அதுதான் வந்திருக்கிறேனே, உங்கக்கிட்டே! தெரியலையா? ஒரு சின்ன சந்தேகம்வந்துட்டுது எனக்கு. உங்க திருவண்ணாமலை மாநாட்டுப் பேச்சைப் படிச்சேன்……”

“படிச்சியா! ஏன் மாநாட்டுக்கு வரலியா?”

“வர முடியலியே! வேலை ஏராளம்! அதாவது நீங்க விவசாயிங்களுக்காகப் போராட்டப் போறதா பேசி இருங்கீங்க. போராட்டம்தமிழ் நாட்டிலேயா? மைசூர் ஸ்டேட்டிலேயான்னு கேட்டுப்போகலாம்னு வந்தேன்”

“ஏன்யா அந்தச் சந்தேகம் வந்துது”

“இல்லே, மைசூர் ஸ்டேட்லே கூட விவசாயத்துக்கு யூனிட்டுக்குப் பத்துப்பைசாதானே வாங்குறாங்க, தமிழ்நாடு மாதிரி, எக்சம்ஷன்கூட எவருக்கும் கொடுக்கலையே, அதனாலே இந்தப் போராட்டம் கர்னாடகமாநிலத்து விவசாயிங்களுக்கோன்னு சந்தேகம்!

“சுத்த மண்டுய்யா நீர்! உம்மைப் போய் பிரஸ் ரிப்போர்டரா போட்டிருக்கானே அவன். அவனைச் சொல்லணும். ஏன்யா, மைசூர்லே இப்போ யாருய்யா ஆளுறது?”

“வீரேந்திரபாட்டீல் உங்கக் கட்சின்னு கேள்வி?”

“ஆமாம் கேள்வி! அங்கே போய் போராடினா என்னய்யா ஆகும்?”

“தலைபோயிடாதே. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும்! மின் கட்டணம் குறையும்!”

“குறையும், குறையும்! என் செல்வாக்கும், கட்சியும்கூடக் குறைஞ்சுப் போகுமேய்யா! நேரம் பார்த்துக்கிட்டிருக்கிற இண்டிகேடுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கச் சொல்றியா? போராட்டம் நடத்துறது அதுக்கில்லையா? இங்கே தீமூக்கா இப்படி ஜம்முன்னு பயணம்போய்க்கிட்டிருக்கில்லே. ஒரு திணரலை உண்டாக்கணும்! அவ்வளவுதான்!”

“அப்போ, தி. மு. க.வை எதுக்கிறதுக்குத்தான் இந்தப்போராட்டம். மின் கட்டணம் குறையணுங்கிறதுக்காக இல்லை”

“யாருய்யா நீ! அதான் ஏற்கனவே குறைஞ்சு இருக்கே!”

“அப்போ, மைசூர் ஸ்டேட் போக மாட்டீங்க”……

“யோவ், பத்திரிகை!……” காமராசர் தலைநிமிர்ந்து பார்க்கும் முன்னரே மறைந்துவிட்ட அப்போலோ தமக்குள், “என்ன அரசியல் நடத்துறாங்க இவுங்க? இங்கே ஒருமாதிரி; இதைவிட்டு நகர்ந்தா, அங்கே ஒரு மாதிரி” என்றெண்ணிக்கொண்டிருந்தார்.

★

காஞ்சி 7—6—70 REGD. No. M. 8326

## கலைஞரை வாழ்த்துகிறேம்!



நாடும் ஏடும் போற்றிடும் வண்ணம் நாட்டின் முதல்வராகத் திகழ்ந்திடும் கலைஞர் அவாகள், கழகப் பணியாலும் கலைத்திறனுலும், கழகத்தினரிடம் மட்டுமின்றி பொதுவாக மக்கள் அனைவரிடமும் தனி மதிப்பைப் பெற்று, தனது திறமையினை அரசின் சாதனைகளாக, கழகத்தின் சாதனைகளாக ஆக்கி, தமிழர் தம் உள்ளந்தோறும் ஊவகைகொள்ளும வகையில், செயலாற்றி வருகிருர்! நாடு நலம் பெறவும், கழகம் மேலும் பொலிவு பெறவும், கலைஞர் கருணநிதி அவர்கள் பல்லாண்டு வாழ "காஞ்சி" தன் உளங்கனிந்த வாழ்த்துகளை அவர் பிறந்த நாளில் படைத்துக்கொள்கிறது.

சிகிச்சை முறையை முற்றிலும் மாற்றிவிட்டன.

சிலரகப் புற்றுநோய்கள் விஷயத்தில் முழுக்கக் குணம் காண்பது இப்போது சாத்தியமாகிவிட்டிருக்கிறது. எல்லாவிதப்புற்றுநோய்களையுமே கட்டுப்படுத்துவதும் சாத்தியமாகிறது. சிகிச்சை வெற்றிகரமாக இருப்பதற்கு வியாதி பரவுமுன்பே ஆரம்பக்கட்டத்தில் அதைக்கண்டு பிடித்து சிகிச்சை செய்வதுதான் வழி. எவ்வளவுகவெவ்வளவு சீக்கிரமாக சிகிச்சை ஆரம்பிக்கிறேமோ அவ்வளவுக்கவ்வளவு வெற்றி நிச்சயம்.

### எல்லா ரகங்களும் காணப் படுகின்றன

வியாதி பரவியிருப்பதை கவனித்தால் இந்தியாவில் எல்லா ரக புற்றுநோய்களும் இருக்கின்றன என்றே சொல்லவேண்டும். பம்பாய் டாட்டா ஞாபகார்த்த ஆஸ்பத்திரியில் 70 000 புற்றுநோயாளர்கள் பரிசீலிக்கப்பட்டார்கள். ஆண்களில் 70 சதவிகிதம் பேர் வாய், தொண்டை புற்றுநோய்க்கு உள்ளானவர்களாகக் காணப்பட்டார்கள். 10 சதவிகிதம் பேர் இரைக்குழல் (குரல்வளை) புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள். பெண்களில் 23 சதவிகிதம் பேர் இரைக் குழல் புற்றுநோய் கண்டவர்கள். பெண்களில் 20 சதவிகிதம் பேருக்கு மார்புப்புற்றுநோய் இருந்தது. 42 சதவிகிதம் பேருக்கு கர்ப்பப்பைக் கழுத்தில் புற்றுநோய் கண்டிருந்தது

இந்தியாவில் காணப்படுகிற புற்றுநோய் மாதிரிகள் மற்ற நாடுகளில் காணப்படுபவைகளிலிருந்து வேறுவிதமாக இருக்கின்றன. எனவே ஆரம்பக் கட்டத்திலேயே வியாதியைக் கண்டறிந்து கொள்வதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். பொதுவான அம்சங்கள் உள்ள புற்று நோய்களை ஆராய வேண்டும்.

"அதிக அபாயத்திற்குள்ளாகிற நபர்கள்" யார் என்ருல் ஆண்களில் ஏராளமான அளவு வெற்றிலை பாக்கு, சுண்ணும்பு, புகையிலை பிற சாதனங்கள் சேர்த்துத் தாம்பூலம் தரிப்பவர்களும். ஏராளமான அளவில் பீடி குடிப்பவர்களும்தான்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியுடன் இந்தியாவில் இரண்டு புற்றுநோய் சிகிச்சைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன! ஒன்று காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணு ஞாபகார்த்தப் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் நடத்தப்படுகிறது. அது குரல்வளை, கர்ப்பப்பைக் கழுத்துப் புற்று நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதில் முக்கிய கவனம் செலுத்தும். நெய்யூரில் உள்ள சர்வதேசப் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் மற்ரெரு திட்டம் நடத்தப்படுகிறது. அங்கே வாய், குரல்வளைக் கட்டிகளுக்கும், புகை பிடிப்பது, புகையிலை, வெற்றிலை குதப்புவது ஆகியவைகளுக்கும் உள்ள தொடர்பு பற்றி ஆராயப்படுகிறது. சமீபத்தில் ஆக்ராவில் எஸ். என். வைத்தியக் கல்லூரியில் ஒரு திட்டம் நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. உத்திரப் பிரதேசம், மெயின்புரி ஜில்லாவில் வாய்—குரல்வளைப் புற்றுநோய்களும் புகையிலைஉபயோகத்திற்கும் உள்ள தொடர்பு ஆராயப்பட்டது.

எந்தப் புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டமாயினும் சரி அது எவ்வளவோ கஷ்டங்களை சமாளிக்க வேண்டியிருக்கிறது. இந்தியாவில் புற்றுநோயைக் கண்டு பிடித்து சிகிச்சை செய்வதற்கான வசதிகள் பிரதான நகர ஆஸ்பத்திரிகளில் தான் இருக்கின்றன. கிராமவாசிகளுக்கு பட்டணங்களுக்கு வந்து போகிற தூரதொலைப் பிரயாணப் பிரச்சினை கவனிக்கப்படவேண்டும். இந்த வியாதி குணப்படுத்த முடியாதது என்கிற தவருன கருத்திலும் மனப்போக்கிலும் பல பேர் தங்களுக்குப் புற்றுநோய் இருக்குமா என்ற சந்தேகம் இருந்தாலும் சீக்கிரமாகவே டாக்டர்களைக் கலந்து ஆலோசிப்பதில்லை. வியாதி முற்றிய பிறகுதான் அவர்கள் டாக்டர்களை நாடுகிருர்கள்.

புற்றுநோய் பிரச்சினை பற்றிப் பெரும்பாலானபேர் பரவலாகத் தெரிந்த பின்தான் சீக்கிரமாய் அதைக் கண்டுபிடிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். இதற்கு, புற்றுநோய்க்கும் சிகரெட் புகைப்பது புகையிலை போடுவது ஆகியவைகளுக்குமுள்ள காரண காரியத் தொடர்பு தெரிந்துகொள்ளப்பட வேண்டும். எனவே நாம் நம் மக்களுக்குப் புற்றுநோய் பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் விளக்க போதனை அளித்து, புற்றுநோயானது குணப்படுத்தப்பட்க்கூடிய வியாதிதான், அதற்கு சீக்கிரமாக, ஆரம்பக்கட்டத்திலேயே வியாதி கண்டிருப்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அவர்கள் உணரும்படிச் செய்யவேண்டும்.

—நன்றி "திட்டம்"

★

...சிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3